பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 22 புதன்கிழமை (05-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:192

✹ இடைக்கால நிர்வாகம் ✹ புலிகள் மீதான தடைநீக்கம்

# வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்குகின்றார் ரணில்!

## பாலசிங்கம் குற்றச்சாட்டு



லண்டன்,ஜூன்5

பேச்சுக்கான திகதியை நிர்ணயித்த பின்னர்தான் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்குவது குறித்து பரிசீலிக்கப் போவதாக அரசு ஒரு நிபந்தனையை விதித்திருக்கிறது.

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை அமைப்பது, புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்குவது போன்ற முக்கிய விடயங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னர் அளித்த வாக்குறுதிகளிலிருந்து தற்போது பின்வாங்குவது எமக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கிறது.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம்.

'தமிழ் கார்டியன்' பத்திரிகைக்கு வழங்கியுள்ள நீண்ட பேட்டி ஒன்றிலேயே பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை பூரணமாக நடைமுறைப்படுத்துவதில அரசு காட்டும் தயக்கம், அதனால் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டிருக்கும் மந்தநிலை என்பன குறித்து அப்பேட்டியில் அன்ரன் பாலசிங்கம் விவரித்திருக்கிறார். புலிகளின் நிலைப்பாட்டை

(11ஆம் பக்கம் பார்க்க)

### நகரில் இளைஞர் குழு அட்டகாசம்:

## நீர்கொழும்பிலிருந்து வந்த பெண் மீது அங்கசேஷ்டை!

### தட்டிக்கேட்ட கணவர் தாக்கப்பட்டார்!!

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ்.நகரப் பகுதியில் குளிர்பான நிலையம் ஒன்றின் முன்பாக நேற்றுப பிற்பகல் மதுபோதையில் வந்ததாகக் கூறப்படும் இளைஞர் கும்பல் ஒன்றைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் குடும்பப் பெண் ஒருவருடன் அங்க சேஷ்டை புரிந்ததை அடுத்து ஏற்பட்ட கைகலப்பில் அந்தப் பெண்ணின் கணவர் உட்பட இருவர் காயமடைந்தனர்.

நீண்ட காலத்தின் பின்னர் நீர்கொழும்பில் இருந்து தமது உறவினர்களைப் பார்ப்பதற்காக இங்கு வந்த குடும்பப்பெண் ஒருவருடனேயே சுமார் 22 வயது மதிக்கதக்க இளைஞர் ஒருவர் அங்கசேஷ்டை புரிந்தார் என்று கூறப்படுகிறது.

பிரஸ்தாப பெண்ணின் கணவர் அந்த இளைஞனை எச்சரிக்கை செய்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

### சிவசிதம்பரம் காலமானார்



கொழும்பு,ஜூன்5

தமிழர் விடுதலைக் கூட்டணியின தலைவரும் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.சிவசிதம்பரம் இன்று அதிகாலை 1.15மணிக்கு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 79.

நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்த இவர் கடந்த சில தினங்களாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தார். (ஐ-3)

## புரிந்துணர்வு உடன்படிக்கை முறிவடைய ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை!

### அமைச்சர் மாரப்பன உறுதிமொழி

கொழும்பு,ஜூன்5

நிரந்தர சமாதானத்துக்காக விடுதலைப் புலிகள் நீட்டிய நேசக்கரத்தை உறுதியாக பற்றி அவர்களுடன் இணைந்து தீர்வுகாண முயல்வோம். புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு வலுச்சேர்ப்போமே தவிர அதை உடைக்க எந்தக் கட்டத்திலும் முயற்சிக்கப் போவதில்லை.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரபபன மேற்கண்டவாறு உறுதிமொழி அளித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல்செய்வதில் படையினர் காட்டும் எதிர்ப்பு, அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளோடு அரசு செய்யவுள்ள உடன்படிக்கைகளால் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அதிருப்தி ஆகியன தொடர்பாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



... தட்டிக் கேட்கிற ஆட்கள் தயவாய்த்தான் நடப்பினம் எண்ட துணிச்சல் பாருங்கோ...

### நாடாளுமன்றத்தில் அனுருத்த!

கொழும்பு,ஜூன்5

மடவளை முஸ்லிம் படுகொலைச் சம்பவத்தின் சந்தேக நபரும் - தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளவருமான முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்று நாடாளுமன்றத்திற்கு சமுகமளித்திருந்தார்.

அவர் சபையில் நுழைந்ததும் பொ.ஐ.மு.உறுப்பினர்கள் வரவேற்றனர். அரசாங்க எம்.பிக்கள் கூச்சல் எழுப்பினர். இதனால் சிறு சலசலப்பு ஏற்பட்டது. (ஐ-6)

## தாய்லாந்து பேச்சு, தடைநீக்கம்; பிரதமர் இந்தியாவில் ஆராய்வார்

### சனியன்று இரண்டாவது விஜயம் ஆரம்பம்

கொழும்பு,ஜூன்5

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்கிறார். அன்று புதிதாக ஆரம்பிக்கப்படும் கொழும்பு - பெங்களூர் விமான சேவை மூலம் பிரதமர் இந்திய விஜயத்தை ஆரம்பிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரதமருடன் வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவும் இந்தியா செல்வார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள நேரடிப் பேச்சுக்கள், புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கம் போன்ற விடயங்களை பிரதமர் ரணில் இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயுடன் விரிவாக அலசி ஆராய்வார். திருகோண

(12 ஆம் பக்கம் பார்க்க)

### கண்டி வீதி ஊடான

## போக்குவரத்து நேரத்தை அதிகரிப்பது பற்றி ஆராய்வு!

யாழ்ப்பாணம்,ஜூன்5

ஏ-9 கண்டி வீதி ஊடான பயணிகள் போக்குவரத்துக்கான நேரத்தை அதிகரிப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்.வதிவிடப் பிரதிநிதி செல்வி சிசில் குறொஸ் இவ்வாறு தெரிவித்தார்.

கண்டி வீதியூடான போக்குவரத்து தற்போது காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. இதனால் மக்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கியோரில் தாயும் நேற்று மரணம்!

யாழ்ப்பாணம்,ஜூன்5

திருநெல்வேலிப் பகுதியில் மின்சாரத்தினால் தாக்குண்ட குடும்பத்தின் அவலம் தொடர்கின்றது. பிள்ளைகள் மூவரையும் தொடர்ந்து நான்காவது நபரான தாயாரும் நேற்று உயிரிழந்துவிட்டார்.

திருநெல்வேலி, வளாக வீதியைச் சேர்ந்த தனபாலசிங்கம் சிவயோகநாயகி (வயது55) என்ற தாயாரே உயிரிழந்தவராவார்.

மேற்படி முகவரியில் உள்ள வீட்டில் புதிதாக அன்ரனா பொருத்திய சமயம் உயர் அழுத்த மின்சார விநியோகக் கம்பி மீது 'அன்ரனா' பைப் சாய்ந்ததில் தாயும் மூன்று பிள்ளைகளும் மின்சாரத்தினால் தாக்குண்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

### மலையகத்தில் சூழ்ச்சி நடக்கிறது

## மின் உற்பத்தி திட்டத்தின் பேரில் தொழிலாளர் நிலங்கள் பறிப்பு!

கொழும்பு,ஜூன்5

மேல் கொத்மலை மின் உற்பத்தி திட்டம் என்ற பெயரில் தோட்டத் தொழிலாளர்களின் பரம்பரை வாழ்விடப் பகுதிகளைப் பறிக்க சூழ்ச்சி நடக்கிறது என்று இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் உபதலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்திருக்கிறார்.

இந்த சூழ்ச்சித் திட்டத்தை தடுத்து நிறுத்த உதவி கோரி அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

அவர் தனது கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:-

"தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தின் மூலம் பெரும்பான்மை இனத்தவர்களின் குடியேற்றத்தை அதிகரித்து மலையகத் தமிழர்களின் செறிவைக் குறைகக்த் திட்டமிட்டு செயற்பட்டுவருகின்றார்கள். இதற்கு மலையகத் தலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அனுமதியின்றி மரம் தறிக்கத் தடை; புலிகளின் வனவளப் பிரிவு அறிவிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்5

அனுமதியின்றி மரங்கள் தறிப்பதை முற்றாகத் தடை செய்துள்ளோம். இத்தடை உத்தரவை மீறுவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

விடுதலைப் புலிகளின் வன்வளப் பாதுகாப்புப் பிரிவு மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

தமிழீழ வனவளப் பாதுகாப்பு பிரிவினர் பொதுமக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றிலேயே இப்படித தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒரு தேசத்தின் பிரதான வளமாகத் திகழ்வது இயற்கையே. இயற்கை தான் உயிரின வாழ்வியலில் முக்கிய பங்கை வகிக்கின்றது.

எனவே நாம் இயற்கையோடு இணைந்திருத்தலும், அதனை அனுசரித்து செல்லுதலும் இன்றியமையாததாகும்.

மேற்குறிப்பிட்ட வகையில் இன்று மரங்களின் முக்கியத்துவத்தை நாம் அறிவியல் ரீதியாக வெளியாகும் ஊடகச் செய்திகள் மூலம் அறிகின்றோமல்லவா? இருந்தும் நாம் மரங்களைப் பற்றி அறிய விரும்புகின்றோமா?

மரங்களைப் பாதுகாக்கின்றோமா?

மரங்கள் அருகி வருவதால் ஏற்படப் போகும் விளைவுகள் பற்றிச் சிந்திக்கின்றோமா?

மாறாக மரங்களை அழிவுக்கு உடபடுத்துகின்றோம் என்பதே உண்மை.

இப்படியாக எமது தேசத்தின் தேசிய வளமான மரங்கள் அழிந்து கொண்டு போவதை உடனடியாக, தடுத்து நிறுத்தி பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொண்ட தமிழீழ வனவளப்பாதுகாப்பு பிரிவானது, வன்னிப்பெருநிலப்பரப்பில் 'அனுமதியின்றி மரங்கள் தறிப்பதை முற்றாகத் தடை செய்து' மரங்களை காக்கும் மகத்தான பணியை மேற்கொண்டு வருகின்றது.

இந்தச் சிறப்பான கைங்கரியத்துக்கு ஒத்துழைப்பு நல்கிய எமது மக்களை நாம் நன்றிக்கண்ணால் நோக்குகின்றோம்.

இது தவிர தமிழீழ வனவளப் பாதுகாப்பு பிரிவினராகிய நாம், இக்கணத்தில் இருந்தே ஏனைய மாவட்டங்களிலும் அனுமதியின்றி மரங்கள் தறிப்பதை முற்றாகத் தடை செய்துள்ளோம் என்னும் உத்தரவைப் பிறப்பிக்கின்றோம்.

எனவே அனைத்து மக்களும், இவ் உத்தரவை மீறாது இத் தேசியப் பணிக்கு பேராதரவு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வளங்களை அழிப்பது வாழ்க்கையை அழிப்பது போலாகும். அதிலும் மரங்களை அழிப்பதென்பது ஒரு சந்ததியை அழிப்பதிலும் கொடுமையானதாகும்.

எனவே அனைத்து மக்களும் இத தேசம் செழிப்புடன் திகழ எமது தேசம் காக்கும் நற்பணிக்கு பாசக் கரம் நீட்டுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எம்மால் பிறப்பிக்கும் இத்தடை உத்தரவை மீறுவோர்கள் மீது ஒழுங்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்பதையும் அறியத்தருகின்றோம் - என்றுள்ளது.

(ஐ-3)

## செஞ்சிலுவை வாகன அணியில் நோயாளர்கள் இன்று வருவர்

யாழ்ப்பாணம்,ஜூன்5

குடாநாட்டில் இருந்து கொழும்புக்கு மேலதிக சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளர்களை கண்டி வீதி வழியாக வாகன அணியில் அழைத்துச் செல்லும் பணியை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இன்று ஆரம்பிக்கின்றது.

கொழும்பில் சிகிச்சை பெறச் சென்ற 20 பேர் இன்று கொழும்பில் இருந்து வாகன அணி மூலம் இங்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

இங்கிருந்து அவசர சிகிச்சைக்குச் செல்லும் நோயாளர்கள் நாளை அந்த வாகன அணி மூலம் அழைத்துச் செல்லப்படுவர் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி தெரிவித்தார்.

கொழும்பில் சிகிச்சை பெற்றுத் திரும்புவர்கள் அங்கிருந்து நேரடியாகவே இங்கு அழைத்து வரப்படுவர் என்றும் -

இங்கிருந்து கொழும்பு செல்லும் நோயாளர்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் ஒரு நாள் இரவு தங்கவைக்கப்பட்டு மறுநாளே கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

பரீட்சார்த்தமாக இன்று மேற்கொள்ளப்படும் இந்த சேவையை தொடர்வது குறித்து பின்னர் முடிவு செய்யப படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை -

ஏற்கனவே நடைமுறையில் உள்ளவாறு அவசர நோயாளர்களை அழைத்துச் செல்லும் 'ஜாயா கோல்ட்' கப்பல் சேவை இம்மாத இறுதிவரை தொடர்ந்து இடம்பெறும் என்றும் -

அந்தச் சேவையை நிறுத்துவது குறித்து இதுவரை முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் -

செஞ்சிலுவை அதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ-3)

## யாழ்.வலய மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ்.வலயப் பாடசாலைகள் மெய வன்மைப் போட்டிகள் இன்று காலை 8 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில ஆரம்பமாகின்றன.

இந்தப் போட்டியின் நாளைய நிகழ்ச்சிகள் இடம்பெறாது என்றும -

அந்த நிகழ்ச்சிகள் எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் இடம்பெறும என்றும் -

அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

# விருட்சமாகிவிட்ட விடுதலைப்போரின் ஆரம்பகால வித்து சிவகுமாரன்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது விடுதலைப் புலிகளினால் நிதானமாகவும், வேகமாகவும் வளர்த்தெடுக கப்பட்ட போதிலும் ஆரம்பகால எழுச்சியை ஏற்படுத்தியவர்களில் பொன். சிவகுமாரன் குறிப்பிடத்தக்கவர். இவர் உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆயுதம் ஏந்திப் போராடி வீரமரணம் அடைந்த மாவீரராவார். இவர் போராளிகள் மத்தியில் 'சயனைற்'றை அறிமுகப்படுத்தியதுடன் 'சயனைற்' அருந்தி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். அமைதிவழிப் போராட்டப்பாதையை நிராகரித்துவிட்டு ஆயுதம் ஏந்திப் போராடினால்தான் தமிழ் மக்களின் இழந்த சுதந்திரத்தையும், உரிமைகளையும் பெறமுடியும் என்ற முடிவுடன் விடுதலைப் போராட்டத்தில் குதித்தவர். இவர் உரும்பிராயைச் சேர்ந்த பொன்னுத்துரை அன்னலட்சுமியின் செல்வப் புதல்வனாவார். யாழ். இந்துக்கல்லூரி, விடுதலைப் போராட்டத்திற்கு தந்த மாணவர்களில் இவர் மூத்தவராவார். இவர் 1971 இல் தமிழ் மாணவர் பேரவையில் சேர்ந்து ஒரு சில இளைஞர்களைச் சேர்த்துக் கொண்டு சிங்கள அரசையும், தமிழ்த் துரோகிகளையும் எதிர்த்து நேரடி நடவடிக்கையில் இறங்கினார்.

**இன்று அவரது நினைவு தினம்**

சிவகுமாரனின் போராட்ட முயற்சிகளில் முதற்கட்டமாக தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்கு உலைவைகும் தரப்படுத்தலை அமுல்படுத்திய சிறிமா பண்டாரநாயக்கா, துணை அமைச்சர் சோமவீர சந்திரசிறி ஆகியோருக்கு நேரக்கணிய வெடிகுண்டு வைத்தார். அதில் அமைச்சர் தப்பிய போதிலும் குற்றச்சாட்டின் பெயரில் கைது செய்யப்பட்டார். பின்னர் சாட்சியங்கள் இல்லாத காரணத்தினால் சில மாதங்களின் பின் விடுதலையானார்.

போராட்ட முறையானது கொள்கைகளை நிலைநாட்ட, இலக்குகளை அடைய பயன்படுத்தப்படும் மார்க்கமே தவிர போராட்ட முறையே கொள்கை அல்ல என்பதை வலியுறுத்தியவர். எனவேதான் போராட்டப் பாதையை ஆயுதம் ஏந்திய போராட்டமாக ஏற்றுக்கொண்டிருந்த போதிலும் தமிழீழ




இலட்சியங்களுக்காக, உரிமைகளுககாக அமைதி வழியில், அஹிம்சை வழியில் நடைபெற்ற போராட்டங்களை பெரிதும் மதித்து வந்தார்.

ஒரு தடவை நல்லூர்க் கந்தசுவாமி கோயில் திருவிழாவில் சனநெரிசலைப் பயன்படுத்தி பெண்களிடம் தகாத முறையில் நடந்த பொலீஸ் ஒருவரை நையப்புடைத்தார். பின்பு அங்கு நின்ற பொலீஸாரால் கைது செய்யப்பட்ட போது அவர்களையும் சரமாரியாகத் தாக்கினார். நிலைமை மோசமாகவே யாழ்ப்பாணத்தில் இருந்து பொலீஸார வரவழைக்கப்பட்டு கைது செய்து அழைத்துச் செல்லப்பட்டார்.

எப்பொழுதுமே மீசை வைத்துக் கொள்ளாது, குழந்தை முகமாக காட்சியளிக்கும் சிவகுமாரன் ஆள்களுடன் பழகுவதிலும் அதே குழந்தைத் தனம் தான் காணப்படும். ஆனால் அநீதிகளையும் முறைகேடுகளை எதிர்கொள்ளும் போது மட்டும் அவன் புலிபோல உறுமுவான். குற்றமற்ற போராளியாக விளங்கிய சிவகுமாரனால் ஒரு சிறந்த விடுதலை அமைப்பை கட்டி எழுப்ப முடியவில்லை. காரணம் அவருடன் பங்குபற்றி வந்த குழுவினர் எல்லோரும் அவன்போல் இருக்கவில்லை. இந் நிலையில் ஒரு சில இளைஞர்களை வைத்துக்கொண்டு ஏதாவது செய்தாக வேண்டும் என்று அவன் எண்ணினான்.

ஆரம்ப கால போராட்ட வரலாற்றில் தலைமறைவாக இருந்தவரும், துரையப்பாவை குறிவைத்து இருந்த வருமான பிரபாகரனைச் சந்தித்து அவருடன் சேர்ந்து இயங்குவதற்கு சிவகுமாரன் பெரிதும் விரும்பினார். அதேபோலவே பிரபாகரனும் சிவ குமாரனைச் சந்திக்க விரும்பினார். பின்பு 4ஆவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு 1974 ஜனவரி 3-9 திகதி வரை யாழ்நகரில் நடைபெற்றது. இதற்கு சிறிமாவின் அரசு பல இடையூறுகளைச் செய்தது. இருப்பினும் யாழ் நகரில் மாநாட்டை நடத்தியே தீருவேன் என சிவகுமாரன் அந்த மாநாட்டு தொண்டர் படையில் இணைந்து சிறப்பாகச் செயலாற்றினார். இதற்கான நற்சான்றிதழை மாநாட்டுக் குழுவிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

1974ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் நாள் தன் தோழர்கள் சிலருடன் கோப்பாய் கிராமிய வங்கிக்கு சென்ற வேளையில் வங்கியின் முன் பொலீஸாரால் சுற்றிவளைக்கப்பட்டார். அங்கு நடந்த துப்பாக்கிச் சண்டையில் ரவைகள் தீர்ந்து போன நிலையில் பொலீஸாரிடம் உயிருடன் பிடிபடக் கூடாது என்ற கொள்கையுடன் தயாராக வைத்திருந்த 'சயனைற்'றை அருந்தி வீரமரணம் அடைந்தார். இவ்வாறு சிவகுமாரன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஊற்றுக்கண்ணாக விளங்கியது மட்டும் அல்லாமல் இன்று ஒரு பெருவிருட்சமாக வளர்ந்திருக்கும் போராட்டத்தின் கர்த்தாவாகவும் திகழ்கிறார்.

*







பெல்ஜியம் வீரர் வென்டர் ஹைடின் தன் தலையால் பந்தை மோதுவதற்கு முன்னர் உயரே எம்பி தன் கால்களை குறுக்கே நீட்டித் தடுக்கும் ஜப்பானிய வீரர் டெய்சுகி இச்சிக்காவா.

# சொந்த நாட்டில் நேற்று கொரியா அணி வெற்றி!

சியோல்,ஜூன்5

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற 'சி' பிரிவின் மூன்று ஆட்டங்களில் இரண்டில் கொஸ்ராரிக்கா மற்றும் தென்கொரியா அணிகள் வெற்றி பெற்றன. ஜப்பான் - பெல்ஜியம் இடையிலான ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

முதலாவது ஆட்டம் சீனாவுக்கும் கொஸ்ராரிக்காவுக்கும் இடையில் தென்கொரியாவில் இடம்பெற்றது. 2-0 என்ற கோல் அடிப்படையில் கொஸ்ராரிக்கா சீனாவை வென்றது. ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணிகளுமே கோல் எதனையும் அடிக்கவில்லை.

முதல் பாதி ஆட்டத்தில் ஜப்பான அணி திறமையாக விளையாடியது. ஆனால் ஆட்டத்தின் பின் பாதியில் ஜப்பானின் பின்கள வீரர்கள் திறமையாக விளையாடாததைப் பயன்படுத்திக்கொண்ட கொஸ்ராரிக்கா அணி இரு கோல்களை அடித்தது. ஆட்டத்தின் 61ஆவது நிமிடத்திலும் 65 ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து கோல்கள் பெறப்பட்டன.

இரண்டாவது ஆட்டம் ஜப்பானில் இடம்பெற்றது. ஜப்பானை எதிர்த்து பெல்ஜியம் அணி விளையாடியது. ஆரம்பம் முதலே இரு அணிகளும் விட்டுக்கொடுக்காமல் ஆடின.

ஆட்டத்தின் 57ஆவது நிமிடத்தில் பெல்ஜியம் வீரர் வில்மோட்ஸ் முதலாவது கோலை அடித்தார். பதிலுக்கு 59ஆவது நிமிடத்தில் ஜப்பானிய வீரர் சுசூகி தன் அணி சார்பில் ஒரு கோலை அடித்து ஆட்டத்தை சம நிலைப்படுத்தினார். மீண்டும் 68 ஆவது நிமிடத்தில் ஜப்பானிய வீரர் இனாமோட்டோ மேலும் ஒரு கோலை அடித்து தனது அணியை முன்னிலைப் படுத்தினார். ஆனால் ஆட்டத்தின் 75 ஆவது நிமிடத்தில் பெல்ஜியம் வீரர் வென்டர் ஹைடின் தன் அணி சார்பில் மேலும் ஒரு கோலை அடித்து ஆட்டத்தை சமநிலைப்படுத்தினார். இறுதியில் 2-2 என்ற கோல் அடிப்படையில் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிந்தது.

இம்முறை உலகக் கிண்ண போட்டிகளை நடத்தும் நாடுகளில் ஜப்பானும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது ஆட்டம் தென்கொரியா மற்றும் பொலண்ட் அணிகளுக்கிடையில் இடம்பெற்றது. இதில் தென் கொரிய அணி பொலண்ட் அணியை 2-0 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்தது.

தென்கொரிய அணிக்கு உள்ளூர ரசிகர்களின் அமோக ஆதரவு இருந்தமை அவர்கள் உற்சாகத்துடன் விளையாடுவதற்குக் ஒரு காரணமாயிருந்தது. ஆட்டத்தின் 19ஆவது மற்றும் 53 ஆவது நிமிடங்களில் அந்த அணி வீரர்கள் ஹூவாங் ஸன் - கொங், ஜூ சுங் - ஷூல் ஆகியோர் கோல்களை அடித்து தமது அணிக்கு வெற்றியைத் தேடித்தந்தனர். (ம)

## ரிவால்டோவின் ஆட்டம் குறித்து சம்மேளனம் தீவிர விசாரணை

சியோல்,ஜூன்5

பிரேஸில் உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரரான ரிவால்டோ சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனமான FIFAவின் அபராதம் மற்றும் தண்டனையை எதிர்நோக்கியுள்ளார்.

நேற்றுமுன்தினம் பிரேஸில் அணிக்கும் துருக்கி அணிக்கும் இடையில் இடம்பெற்ற முக்கியமான ஆட்டத்தின ஒரு கட்டத்தில் துருக்கிய வீரர் ஹகான் அன்சால் பந்தையடித்த போது அது பட்டு தான் அதிகம் பாதிக்கப்பட்டதாக நடித்து ரிவால்டோ நடுவரைத் தவறாக வழிநடத்தியதாக தற்போது அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தால் அன்ஸால் நடுவரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். அதேசமயம் அவரின தவறான ஆட்டத்துக்கு அபராதமாக பிரேஸில் அணிக்கு பெனால்டி உதை ஒன்று கிடைத்தது. அதனை கோலாக்கிய பிரேஸில் அந்தப் போட்டியில் வெற்றிபெற்றது.

ரிவால்டோ அன்ஸாலின் ஆட்டத்தின் மூலம் தான் அதிகம் பாதிக்கப்பட்டது போன்று மிகையாக நடித்து நடுவரை ஏமாற்றி விட்டார் என்று கூறப்படுகின்றது. இது குறித்து தற்போது FIFA அந்த ஆட்டத்தின் வீடியோ நாடாவைப் பரிசீலித்து வருகிறது. இதில ரிவால்டோ நடுவரை ஏமாற்றியது உண்மை என்று நிரூபணமானால் அவர் கடுமையாகத் தண்டிக்கப்படலாம்.

### இன்று நடக்கும் ஆட்டங்கள்

சியோல்,ஜூன்1

உலகக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள், போட்டி நடைபெறும் நாடு, நேரம்(உள்ளூர் நேரம்) என்பன வருமாறு:-

- ரஷ்யா எதிர் துனிஷியா (ஜப்பான் - பகல் 12.30)
- அமெரிக்கா எதிர் போர்த்துக்கல் (கொரியா - பகல் 3.00)
- ஜேர்மனி எதிர் அயர்லாந்து (கொரியா - மாலை 5.30) (ம)



குறிப்பிட்ட சம்பவத்தில் ரிவால்டோ பாதிக்கப்பட்டு விழுந்து கிடக்கும் காட்சி.

# கருச்சிதைவை ஆதரித்து சுவிஸ் மக்கள் வாக்களிப்பு

சுவிற்ஸர்லாந்தில் பெண்கள் கருச்சிதைவு செய்வதைக் குற்றமாகக் கொள்வது நிறுத்தப்படவேண்டும் என்பதை ஆதரித்து பெரும்பாலான சுவிஸ் மக்கள் வாக்களித்துள்ளனர்.

1937ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கருச்சிதைவு குறித்த சட்டமே இன்றும் சுவிற்ஸர்லாந்தில் நடைமுறையில் உள்ளது. ஐரோப்பாவில் கருச்சிதைவு தொடர்பான மிகப் பழைமையான சட்டம் இதுவாகும்.

இதன்படி, பிரசவத்துக்கு ஏற்ற உடல்நிலை அற்ற பெண்களைத் தவிர, கருச்சிதைவு செய்துகொள்ளும் ஒரு பெண்ணோ அல்லது கருச்சிதைவு செய்துகொள்ள உதவுபவரோ 14 ஆண்டுகள் சிறை மற்றும் பெரும் தொகை அபராதம் ஆகியவற்றை தண்டனையாக பெறக்கூடும்.

இதேசமயம், கடந்த ஒரு தசாப்த காலமாக சுவிற்ஸர்லாந்தில் பரவலாக கருச்சிதைவுகள் செய்யப்படும்போதும், இந்தக் குற்றத்தின் கீழ் எவருக்கும் தண்டனை விதிக்கப்படவில்லை.

இந்த நிலையில், கருச்சிதைவு செய்து கொள்வதை சட்டபூர்வ விடயமாக்கும்படி சுவிற்ஸர்லாந்தின் பல்வேறு மாகாண அரசுகளும் வலியுறுத்தி வந்தன. இதனையடுத்தே இது தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு கடந்த வாரம் நடத்தப்பட்டது.

அதில் கருச்சிதைவை சட்டபூர்வமாக்கவேண்டும் என்று பெரும்பாலான சுவிஸ் மக்கள் வாக்களித்துள்ளனர்.



இஸ்ரேலிய அமைச்சர் படுகொலையில் தொடர்புடையதாகக் கூறப்படும் பலஸ்தீனத் தீவிரவாதத் தலைவர் அஹமட் சதாத்தை பலஸ்தீன நீதிமன்றம் விடுவிக்கத் தீர்மானித்ததை அடுத்து பலஸ்தீனருக்கு எதிரான தனது இராணுவ நடவடிக்கையை இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ளது. துல்க்ராமில் பலஸ்தீனத் தீவிரவாதத் தலைவர் ஒருவரின் வீடு இஸ்ரேலிய இராணுவத்தினரின் தாக்குதலில் எரிவதையும் இஸ்ரேலியப் படையினரின் வீதிக் கட்டுப்பாட்டை தன்குழந்தையுடன் அத்துமீற எத்தனிக்கும் பெண்மணியையும் படங்களில் காணலாம்.

### ஆபிரிக்க மாநாட்டில்

# எய்ட்ஸ் தடுப்பு ஆய்வுக்கு அதிக நிதி ஒதுக்க முடிவு

கேப்டவுன்,ஜூன்5

ஆபிரிக்க நாடுகளில் வாழும் மக்களுக்காக எய்ட்ஸ் தடுப்பு மருந்தை தயாரிப்பது தொடர்பான ஆராய்ச்சிக்கு நிதி வளத்தைப் பலப்படுத்துவதென ஆபிரிக்க நாடுகள் தீர்மானித்தன.

ஆபிரிக்காவில் எய்ட்ஸ் நோயை சமாளிப்பது குறித்து தென்னாபிரிக்காவின் கேப்டவுன் நகரில் இடம்பெற்ற மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

பிரபல மருத்துவர்கள், விஞ்ஞானிகள், உதவி நிறுவனங்கள், உதவும் நாடுகள், மருந்துத் தொழிற்சாலைகள் ஆகியன இந்த மாநாட்டில் கலந்துகொண்டன.



ஆபிரிக்க மருத்துவமனையில் எய்ட்ஸ் நோயாளி

எய்ட்ஸ் தடுப்பு மருந்துகள் தொடர்பான பெரும்பாலான ஆராய்ச்சிகள் மேற்கு நாடுகளிலேயே இடம்பெறுவதாகவும் -

உலகில் வேறு எந்த இடத்திலும் காணப்படாத வித்தியாசமான எய்ட்ஸ் வைரஸ் ஆபிரிக்காவில் காணப்படுவதால் அதற்கு தனியான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியம் என்றும் -

எய்ட்ஸ் நோய்க்கு எதிராக நீண்ட காலம் பாதுகாப்பளிக்கக்கூடிய தடுப்பு மருந்தே ஆபிரிக்காவுக்கு தேவைப்படுவதாகவும் -

மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆபிரிக்கர்களுக்கான எய்ட்ஸ் தடுப்பு மருந்து ஆராய்ச்சி நிதியை இரண்டரைக் கோடி டொலர்களாக உயர்த்த மாநாட்டில் இணக்கம் காணப்பட்டது.

உலகில் 4கோடி பேர் எய்ட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 70வீதமானோர் ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ளனர். (ஒ)

### மோசமாகத் தரம் குறைந்துவிட்ட

# ரஷ்ய இராணுவத்தை மறுசீரமைக்கத் திட்டம்

மொஸ்கோ,ஜூன்5

தனது இராணுவ வல்லாண்மையை மேம்படுத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளது. அதிபர் விளாடிமிர் புடின் தலைமையில் இடம்பெற்ற ரஷ்யாவின் தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ரஷ்யப் படைகளின் எதிர்கால வளர்ச்சிக்கான வரைவுத் திட்டமொன்றை அங்கீகரித்துள்ளது.

ரஷ்ய ஆயுதப் படைகளின் தரம் மிக மோசமான நிலைமையில் உள்ளதாக அதிகாரபூர்வமாக ரஷ்ய அரசு ஒப்புக்கொண்டதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சோவியத் ஒன்றியத்தின் பலம் மிக்க இராணுவமாக இருந்த அமைப்பு, சோவியத் ஒன்றியம் பிளவுபட்ட பின்னர் ரஷ்ய ராணுவமாக மாறியது. அதிலிருந்து ரஷ்ய படைகளின் தரம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வந்துள்ளதாக ரஷ்ய பொது ஊழியர்களின் தலைவர் அனடோலி கவஷ்னின் தெரிவித்தார்.

அடுத்துவரும் 10 ஆண்டுகளுக்குள் ரஷ்ய படைகள் மறுசீரமைக்கப்படாவிட்டால் அது ஒற்றுமை குலைந்து சிதறநேரிடும் என்று மேற்குலக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வறுமையால் பாதிக்கப்பட்ட ரஷ்யப் படையினர் குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகவும்-

பொருளாதார நெருக்கடி காரணமாக படை அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படுவதில்லை என்றும் -

இதே நிலை நீடித்தால் ரஷ்ய படைகளில் அதிகாரிகள் இல்லாத நிலை ஏற்படும் என்றும்-

கூறப்படுகிறது.

ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களை திருடும் ரஷ்யப் படையினர், அவற்றை பகிரங்கமாக விலை பேசுவது ரஷ்யாவில் சர்வ சாதாரணமான ஒன்றாகிவிட்டதாக அனடோலி கவஷ்னின் தெரிவித்தார். ரஷ்யப் படையினரின் உடற்தகுதியும் கேள்விக்குறியாகியுள்ளது. குறிப்பாக செச்சினியத் தீவிரவாதிகளை எதிர்த்துப் போராடிவரும் ரஷ்யப் படையணியில் 25 வீதமானோர் இராணுவத்தில் பணியாற்றக்கூடிய உடல் நிலை அற்றவர்கள் எனக் கூறப்படுகிறது.

இத்தகைய மோசமான நிலையில் உள்ள தனது இராணுவத்தை மறுசீரமைக்கவே ரஷ்ய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (ஒ)

### கொசோவா நிர்வாகத்தில்

# ஐ.நா.செயற்பாடு குறித்து கடுமையான விமர்சனங்கள்

லண்டன்,ஜூன்5

கொசோவாவில் ஐ.நா. தனது திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டதாகக் கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

கொசோவாவில் இனப்படுகொலைகளைத் தடுக்கும் வகையில் அதன் நிர்வாகம் ஐ.நாவின கட்டுப்பாட்டின் கீழ் வந்ததில் இருந்து, ஐ.நாவின் செயற்பாடு கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி இருப்பது இதுவே முதன் முறையாகும்.

சர்வதேச பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் குழுவின் அறிக்கையிலேயே இந்த விமர்சனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

குறிப்பாக, அல்பேனியர்களும் செர்பியர்களும் வாழும் மிட்ரோவிகா நகரின் நிர்வாகத்தில் செர்பிய அரசு ஆதிக்கம் செலுத்துவதை ஐ.நா. தடுக்கத் தவறிவிட்டதாகவும் -

இதனால் அந்த நகரத்தின் மீது அல்பேனியர்களுக்கு உள்ள உரிமை எதிர் காலத்தில் பறிபோய்விடும் நிலைமை உருவாகியுள்ளதாகவும் -

இதுபோன்றே கொசோவாவில் சுதந்திரமான அரசியல் தலைவீடுகள் பலவற்றை தடுக்க ஐ.நா. தவறிவிட்டதாகவும் -

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுளளது.

# முஷாரப் - வாஜ்பாய் பரஸ்பரம் குற்றச்சாட்டு

அல்மாடி,ஜூன்5

இந்தியப் பிரதமர் வாஜ்பாயும், பாகிஸ்தானிய அதிபர் முஷாரப்பும் காஷ்மீரில் இடம்பெறும் இராணுவ மோதலுக்கு பரஸ்பரம் குற்றஞ்சாட்டி கடுமையாக சாடியுள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையேயான பதற்றத்தைத் தணிக்கும் நம்பிக்கைகளை இது தகர்த்துள்ளது.

கஜக்ஸ்தானில் இடம்பெறும் ஆசியப் பிராந்திய பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்தபோதே இரு தலைவர்கள் ஒருவரை ஒருவர் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

எல்லை தாண்டும் பயங்கரவாதத்தை தடுப்பதாக பாகிஸ்தான் அளித்த வாக்குறுதியை காப்பாற்ற அதிபர் முஷாரப் தவறிவிட்டதாகவும் -

காஷ்மீரில் தீவிரவாதம் அதிகரித்து வருவதற்கு அதிபர் முஷாரப்பே காரணம் என்றும்-

பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார்.

காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா தவறிவிட்டதாகவும் -

தனது நாடு போரை ஆரம்பிக்காது. ஆனால் போர் தம்மீது திணிக்கப்பட்டால் கடும் விளைவுகளை இந்தியா சந்திக்கும் என்றும் -

அதிபர் முஷாரப் தெரிவித்தார். (ஒ)

# 35 இந்திய வீரரைக் கொன்றதாக பாகிஸ்தான் படையினர் அறிவிப்பு

இஸ்லாமாபாத்,ஜூன்5

காஷ்மீர் எல்லையில் இடம்பெற்ற மோதல்களில் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 35 பேரைக் கொன்றுவிட்டதாக பாகிஸ்தானியப் படையினர் அறிவித்துள்ளனர்.



பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தான் படை வீரர்

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் நீலம் பள்ளத்தாக்கின் ரவலாகோட் மற்றும் கோட்லி பகுதிகளில் இந்திய இராணுவம் நடத்தி ஷெல் தாக்குதலில் 6 பாகிஸ்தானியப் பொதுமக்கள் உயிரிழந்ததுடன் 11பேர் காயமடைந்தனர்.

இதற்குப் பதிலடியாக பாகிஸ்தானிய இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் இந்திய இராணுவத்தின் முகாம் ஒன்றும் பதுங்குழிகளும் அழிக்கப்பட்டன. இந்தியப் பகுதியில் தீ கொளுந்து விட்டு எரிந்தது. இதில் 35இந்திய வீரர்கள் கொல்லப்பட்டனர் என்று பாகிஸ்தானிய இராணுவம் தெரிவித்தது.

(ஒ)

# பாடசாலை மாணவர் இருவர் தாய்லாந்தில் சுட்டுக்கொலை!

பாங்கொக்,ஜூன்5

தாய்லாந்தில் பாடசாலை சிறுவர்கள் பயணித்த பஸ் மீது துப்பாக்கிதாரி ஒருவர் கண்மூடித்தனமாகச் சுட்டதில் இரு சிறுவர்கள் உயிரிழந்தனர்; 13பேர் காயமடைந்தனர்.

மியான்மர் எல்லை அருகே உள்ள ரஜாபுரி மாவட்டத்தில் நேற்று இந்தக் கொடூரச் சம்பவம் இடம்பெற்றது.

பான் கா வித்தியா உயர்தர பாடசாலையைச் சேர்ந்த இருபதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயணித்த பஸ் மீது மூன்று பேர் கண்மூடித்தனமாகச் சுட்டதாகவும் - ஆனால் பஸ் சாரதி சூட்டுக்காயத்துக்கு ஆளானபோதும், பஸ்ஸை வேகமாகச் செலுத்தி தப்பித்ததாகவும் -

இதனால் மேலும் உயிரிழப்புகள் ஏற்படாது தடுக்கப்பட்டதாகவும் - பொலீஸார் தெரிவித்தனர்.

துப்பாகிச் சூடு நடத்தியவர்கள் முகமூடிகளும், காட்டு பயணத்தின் போது அணியும் உடைகளும் அணிந்திருந்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். அப்பகுதியில் மியான்மர் அரசு ஆதரவுடன் செயற்படும் தீவிரவாதிகளின் செயலாக இது இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

(ஒ)

# மன்னர் முடிசூடிய தினத்தை கொண்டாடுகின்றது பூட்டான்!

## நவீன உலகுடன் இணைகிறது

திம்பு,ஜூன்5

இமயமலைப் பகுதி நாடான பூட்டானில் அதன மன்னர் ஜிக்மி சிங்கி வான்க்சுக் முடிசூடிக் கொண்டதன் 30 ஆம் ஆண்டு நிறைவை அந் நாட்டு மக்கள் கோலாகலமாகக் கொண்டாடுகின்றனர்.



மன்னர் ஜிக்மி சிங்கி வான்க்சுக்

பழங்குடியின மக்கள் நிறைந்த நாடான பூட்டானில் வெளிஉலகத் தொடர்புகள் முதன் முறையாக ஆழமாக ஊடுருவி இருப்பதால், மன்னரின் முடிசூட்டு விழா கொண்டாட்டங்கள் சர்வதேச ஊடகங்களில் இடம்பெற்றுள்ளன.

வழக்கமாக பூட்டானின் பாரம்பரிய முறைப்படி மூங்கில்களால் தாயாரிக்கப்பட்ட அம்பு, வில்களை பயன்படுத்தி நடத்தப்படும் விற்போட்டியில் இந்த வருடம் ஒலிம்பிக் போட்டிகளில் பயன்படுத்தப்படும் உபகரணங்களே வில்வீரர்களால் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இமயமலையின் மடியில் பின்தங்கியிருந்த பூட்டான் நவநாகரிக உலகுடன் இணையத் தொடங்கிவிட்டதையே இது எடுத்துக் காட்டுகிறது.

(ஒ)

# வைரச் செருப்பு வாங்கலையோ...



அமெரிக்காவைச் சேர்ந்த வடிவமைப்பாளரான ('டிசைனர்') ஸ்ருவர்ட் விபாட்ஸ் மன் மிகவும் கவலையில் இருக்கிறார். மிக அண்மையில் தனது புதிய தயாரிப்பு (...?) ஒன்றுக்காக மிகவும் சந்தோஷப்பட்ட அவர் தற்போது அது விலை போகாததால் மிகவும் கவலையில் ஆழ்ந்து போயுள்ளார்.

இவரது தயாரிப்பு என்ன தெரியுமா? வைரங்கள் பதித்த 'பிளாட்டினம் கயிற்றால் தயாரிக்கப்பட்ட ஒரு ஜோடி செருப்புக்கள்தான். இதில் 464 வைரங்கள் பதிக்கப்பட்டுள்ளன. விலை என்ன தெரியுமா சுமார் 9கோடி இலங்கை ரூபாய்கள் (அம்மாடி யோவ் ஒரு செருப்புக்கா இந்தவிலை)

சமீபத்தில் நடந்த ஒஸ்கார் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட நடிகை லாரா ஹாரிங் இந்த வைரச் செருப்பை அணிந்து வந்தார். அதனைப் பார்த்து பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் ஆகா! ஓகோ!! என்று புகழ்ந்தன.

விளம்பரத்துக்காக வியட்ஸ்மனே நடிகையின் காலில் தன் தயாரிப்பை அணிவித்து விட்டிருந்தார். அதன் பின்னர் பிரிட்டனில் நடந்த கண்காட்சியிலும் இந்த வைர செருப்பு வைக்கப்பட்டது. எல்லோரும் புகழ்ந்தார்கள்.

ஆனால், சோகம் என்னவென்றால் அதனை யாருமே வாங்க முன்வராதது தான். இப்போது நொந்துபோய் இருக்கிறார் ஸ்ருவர்ட்.

# 'அரபாத் சிப்ஸ்'

இந்த வியாபாரத்துறையினரும் விளம்பரதாரர்களும் எதை, எப்போது, எங்கே, என்ன செய்வார்கள் என்று தெரியாமல் திணறிப்போயுள்ளது உலகம்.

ஏதாவது அல்லது எவராவது பெரும புகழ் பெற்றுவிட்டால் அதை அல்லது அவரை தங்கள் விளம்பரத்துக்குப் பயன்படுத்த அவர்கள் தயங்குவதே இல்லை.

மத்திய கிழக்கில் உயிருக்குப் போராடும் பலஸ்தீன மக்கள் தலைவரான யஸீர் அரபாத்தையும் தங்கள் விளம்பரத்துக்குப் பயன்படுத்த அரபு நாட்டு வியாபார நிறுவனங்கள் தயங்கவில்லை.

இப்போது அரபுநாடுகளில் அமோக விற்பனையாவது அரபாத் படம் போட்ட பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்ட உருளைக்கிழங்கு வறுவல்கள் தான்.

இஸ்ரேலியர்களுடனான போரில் பலஸதீனர்களுக்கு ஆதரவு வழங்கவே தனது தயாரிப்புக்களை அடைக்கும் பைக்கற்றுக்களில் அரபாத்தின் கார்ட்டூன்களை வரைநதுள்ளதாகத் தெரிவிக்கிறார் இதன் தயாரிப்பாளர்.

# அட! அப்பாடியா!!



இங்கேயும் யாராவது இப்படிச் செய்வார்களோ.........?

# ரோபோ விமானம்

உலகின் முதலாவது ரோபோ விமானம் (Robotic Plane) தயாரிக்கப்பட்டுவிட்டது. போயிங் விமான நிறுவனம் அண்மையில் இதனை வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது. எக்ஸ் -45 (X-45) என்று பெயரிடப் பட்டுள்ள இந்த விமானம் ஆள்களில்லா தன்னியக்க விமான வகையைச் சேர்ந்தது.

இதன் நீளம் 27 அடி, அகலம் 34 அடி, உயரம் (நிலத்தில் நிற்கும் போது) 3.7 அடி, சாதாரண நிறை 8 ஆயிரம் பவுண்ட்ஸ், எரிபொருள் ஏற்றக்கூடிய அளவு 2ஆயிரத்து 690 பவுண்ட்ஸ், பொருள்கள் ஏற்றக்கூடிய அளவு ஆயிரத்து 500 பவுண்ட்ஸ், 35 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கக் கூடியது, வேகம் மணிக்கு 600 மீற்றர். இந்த விமானத்தில் ஆயுதங்களையும் பொருத்த முடியும்.




அவற்றை யாருடைய கட்டுப்பாடும் இல்லாது தானே இயக்கும் வல்லமை இதற்கு உண்டு. எதிரியின் இலக்கை சரியாக இனங்கண்டு அதனைத் தாக்கி அழிக்கும் திறனும் இதற்கு வழங்கப்பட்டுள்ளது. தரையிலுள்ள கட்டுப்பாட்டாளர் விமானம் பறக்கும் உயரத்தை மட்டுமே கட்டுப்படுத்த முடியும்.

இதனை அமெரிக்க விமானப்படையில சேர்ப்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது. இத்தகைய பெரிய ரோபோ விமானஙகளை 2008 ஆம் ஆண்டளவில் தயாரிப்பதற்கும் அமெரிக்க விமானப்படை திட்டமிட்டு வருகிறது.

எதிர்காலத்தில் ஆள்களற்ற இயந்திரப் போரில் இவை மிக முக்கிய பங்காற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தயாரிப்பு : கனிமொழி**



# செட்டையில்லா கோழிகள்

குடாநாடு முழுவதும் இப்போது ஆங்காங்கே இறைச்சிக் கோழிக் கடைகள் இருககின்றன. அங்கே போனால் சுத்தம் செய்த இறைச்சிக்கு ஒரு விலை. சுத்தம் செய்யாத இறைச்சிக்க ஒரு விலை என்று சொல்கிறார்கள்.

இதற்கெல்லாம் தீர்வாக இறகுகளே இல்லாத இறைச்சிக்கோழிகளை இஸ் ரேலிய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். நீண்டகால ஆராய்ச்சியின் பின் அவர்கள் இந்த முயற்சியில் வெற்றி பெற்றுள்ளனர்.

இங்கே படத்தில் உள்ளது அத்தகைய கோழிகளில் ஒன்றுதான் 'நேரடியாக சட்டிக்குப்போகும் கோழிகள்' என்று மேற்குல கப் பத்திரிகைகள் இதனை வர்ணித்துள்ளன.

# மீண்டும் உயரமா?



செப்ரெம்பர் 11 தாக்குதல் என்று புகழ் பெற்ற அமெரிக்க உலக வர்த்தக மையக் கட்டடங்கள் மீதான தாக்குதல் நடத்தி அவற்றைத் தரைமட்டமாக்கியது. அதற்குப் பதிலாக அமெரிக்கா ஆப்கானில் இருந்து தலிபான்களை அகற்றியது எல்லாம் பழங் கதையாகிவிட்டது.

இப்போது நியயோர்க்கில் உலக வர்த்தகமையக் கட்டடம் இருந்த இடத்தில் புதிய வர்த்தக மையம் ஒன்றைக் கட்டு வதற்கு வரைபடங்கள் தயாரிக்கிறார்கள் என்பதுதான் புதிய தகவல். இதற்காக பல நாட்டு கட்டடக்கலை நிபுணர்கள் வரைபடங்களைத் தயாரித்துள்ளனர்.

அவற்றில் நியூ ஸிலாந்து நாட்டுத் தொழில் அதிபர் தயாரித்த உலக வர்த்தக மையக் கட்டடத்தையே படத்தில் காண் கிறீர்கள். 'புதிய உலக வர்த்தக மையம் 2002' என்ற பெயரில் இதனை அவர் உருவாக்கியுள்ளார்.

இந்தக் கட்டடம் 5 கோபுரங்களைக் கொண்டது. ஒவ்வொன்றிலும் 81 தளங்கள் இருக்கும். இதன் உச்சியில் ஷபிரமிட்ஹ போன்ற அமைப்பு வைக்கப்பட்டிருக்கும். இதன்மூலம் சுற்றியுள்ள 4 கட்டடங்களும் இணைக்கப்படும். கட்டடத்தின் மொத்த உயரம் ஆயிரத்து 750 அடிகளாகும். இது கட்டப்பட்டால் உலகின் மிக உயரமான கட்டடமாக இதுவே இருக்கும். விமானம் இடித்ததும் புகை மண்டல ஷமாகக் கிளம்பி நொறுங்கி விழுந்ததைப் பர்த்த பின்னும் உயரமான கட்டடம் கட்டுவதில் இவர்களுக்கு உள்ள ஆர்வம் இன்னும் போகவில்லை போல் இருக்கிறது. அமெரிக்காவின் இந்த முயற்சியால் மகிழும் ஒரே நபராக பின்லேடனே இருக்கக்கூடும்.

# செவ்வாயில் மனிதக் குடியேற்றம்!

"சூறிப்பில் ஏழுச் செவ்வாய்க் இருப்பதால் திருமணம் அவ்வளவு கெதியாய் நடக்காது; கொஞ்சம் கஷ்டம்தான்" - என்று சோதிடர்கள் கூறுவதை நீங்கள் கேட்டிருப்பீகள். இதற்கு பரிகாரம் என்று பலதையும் அவர்கள் சொல்வார்கள். இதற்குக் காரணமானது சாதகக் குறிப்பில் செவ்வாய்க் கிரகம் 7ஆம் இடத்தில் இருப்பதுதான்.

இவ்வாறு நாம் செவ்வாய்க்குற்றத்துக்கான பரிகாரம் குறித்து ஆராய்ந்து கொண்டிருக்கையில், அதே செவ்வாய்க்கோள் பற்றி உண்மையிலேயே தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்கள் அமெரிக்க விஞ்ஞானிகள்.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாஸாவுக்கு அண்மையில் கிடைத்த ஒரு தகவல், செவ்வாய்க் கிரகம் குறித்து மிகத் தீவிரமாக ஆராய அவர்களைத் தூண்டியுள்ளது.

மிக நீண்டகாலமாகவே செவ்வாய் குறித்து நாஸா விஞ்ஞானிகள் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். பூமிக்கு வெளியே இந்தப் பிரபஞ்ச வெளியில் பூமியைப் போன்ற உயிரிணங்கள் வாழக்கூடிய ஒருகோள் இருககலாம். என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

அதற்கான ஆதாரங்கள் செவ்வாயில் இருக்கலாம் என்று அதன் அமைப்பை வைத்து ஆரம்பத்தில் விஞ்ஞானிகள் கருதினர். இதனால் செவ்வாய் குறித்து அவர்கள் அதி

**பிரேம்**

கம் கவனஞ்செலுத்த ஆரம்பித்தனர்.

சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கா அனுப்பிய 'பாத்பைண்டர்' என்ற விசேட இயந்திரம் செவ்வாயில் தரையிறங்கியது. செவ்வாய் குறித்த ஆய்வில் இது ஒரு சாதனையாகியது.

பாத்பைண்டரின் ஆய்விலிருந்து செவ்வாயில் உயிரினங்கள் இருக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் மிகக் குறைவு என்று விஞ்ஞானிகள் கண்டு கொண்டார்கள். இதனால் அவர்களது உற்சாகம் வடிந்துபோனது.



பாத்பைண்டர்

ஆனாலும், தொடர்ந்து அனுப்பப்பட்ட விண்கலங்களில் சில எடுத்து அனுப்பீய படங்களில், செவ்வாயில் நீரூற்றுக்கள், ஆறுகள் என்பன இருநததற்கான அடையாளங்கள் காணப்பட்டன. இது விஞ்ஞானிகள் மனதில் தொடர்ந்து நம்பிக் கையைத் தக்க வைத்திருந்தது.




செவ்வாயில் நீரூற்றுக்கள் இருந்த தற்கான அடையாளங்கள்.

இறுதியில் நாஸா அனுப்பிய 'ஒடிஸி'(Odyssey) என்ற விண்கலம் அனுப்பிய ஆய்வுகளும் படங்களும் விஞ்ஞானிகளின் நம்பிக்கை வீண் போகவில்லை என்று காட்டின.

'ஒடிஸி' விண்கலம் அண்மையில் நடத்திய ஆய்வுத் தகவலின்படி செவ்வாயில் தண்ணீர் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. நிலத்துக்குக் கீழே பனிப்பாறை இருப்பதை 'ஒடிஸி' உறுதிப்படுத்தியுள்ளது. அது தண்ணீர்தான் என்பதையும் அது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்துள்ளது. அது தொடர்பான படங்களையும் அனுப்பியுள்ளது.

செவ்வாயில் இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ள பனிப்பாறையானது நிலத்துக்குக் கீழே சுமார் மூன்று அடி (ஒரு மீற்றர்) ஆழத்தில் இருக்கின்றது. செவ்வாயில் 60 பாகை தெற்காக இது காணப்படுகிறது. இந்தப் பனிப்பாறை உருகினால் சுமார் 500 மீற்றர் விஸ்தீரணமுள்ள கடல் தோன்றலாம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.




செவ்வாயின் ஒரு தோற்றம்

இதனைவிட கண்டுபிடிக்கப்பட்ட பனிப்பாறை குறித்து விஞ்ஞானிகளுக்கு மற்றுமொரு சந்தேகமும் இருக்கின்றது. அதாவது கண்டுபிடிக்கப்பட்ட பனிப்படிமமானது ஏன் ஒரு பனிமலையின் நுனிப் பகுதியாக இருக்கக் கூடாது என்பதுதான் அந்தச் சந்தேகம். இது குறித்தும் அவர்கள் தீவிரமாக ஆராய்ந்துவருகின்றார்கள்.

கண்டுபிடிக்கப்பட்டது உண்மையில் பனிப்பாறைதானா? அதாவது நீரா என்று ஆராயுமாறு நாஸா விஞ்

(10ஆம் பக்கம் பார்க்க)

எதிர்காலத்தில் தரையிறங்கவுள்ள நாஸாவின் புதிய கலம்



உதயன்

## நூறு நாள்களில் உடன்படிக்கை!

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து நூறு நாள்கள் முடிந்துவிட்டன.

போரை நிறுத்தி, பேச்சு நடத்தி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் கடந்த பெப்ரவரி 22ஆம் திகதி செய்துகொண்ட உடன்படிக்கை இது.

பிரச்சினைத் தீர்வுக்கான உடன்படிக்கையே இப்போது பிரச்சினையாகிவிட்டது.

காரணம், உடன்படிக்கை அரசினால் சரிவர நடைமுறைப்படுத்தப்படவில்லை. உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செய்யவேண்டிய காரியங்கள் இன்னமும் செய்து முடிக்கப்படவில்லை.

ஒவ்வொரு காரியத்தைச் செய்வதற்கும் உடன்படிக்கையில் கால அட்டவணை தரப்பட்டிருக்கிறது. அது அறவே கவனிக்கப்படவில்லை.

குறிப்பாகப் படையினர் நிலைகொண்டுள்ள வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள், பொதுக் கட்டடங்கள் ஆகியவற்றிலிருந்து படையினரைப் படிப்படியாக விலக்கிக்கொள்ளவேண்டும் என்று ஒவ்வொன்றுக்கும் காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அதன்படி வழிபாட்டுத் தலங்களிலிருந்து படையினர் இதுவரையில் முற்றாக விலகியிருக்கவேண்டும். எல்லாப் பாடசாலைகளிலிருந்தும் பொதுக்கட்டடங்களிலிருந்தும் படையினர் முற்றாக விலகுவதற்கு ஜூலை 31ஆம் திகதிவரை கால அவகாசம் இருந்தாலும் இதுவரை கணிசமான எண்ணிக்கையினர் விலக்கப்பட்டிருக்கவேண்டும். அது நடைபெறவில்லை.

தாம் நிலைகொண்டுள்ள பகுதியில் உள்ள சில கோயில்களைத் தாம் திறந்துவிட்டு விட்டதாகப் படையினர் கூறினாலும் பொதுமக்கள் அங்கே சென்று சுவாமி கும்பிட முடியாத நிலையே இருந்து வருகிறது.

சில பாடசாலைகளிலிருந்து படையினர் வெளியேறிவிட்டார்கள். ஆயினும் அந்தப் பாடசாலைகளில் வகுப்புகளை நடத்தமுடியாத நிலை.

சில பாடசாலைகள் அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் இருப்பதால் அவற்றிலிருந்து படையினரை அகற்றமுடியாது என்று பாதுகாப்பு அமைச்சே கையை விரித்துவிட்டது.

வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் மட்டுமன்றி, மீன்பிடித் தடையை நீக்குவதிலும் அரசாங்கம் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாகவும் உடன்படிக்கையின் நோக்கம் நிறைவேறும் விதத்திலும் நடந்துகொள்ளவில்லை.

புரிந்துணர்வு உடன்படிக்கைப்படி மீன்பிடித் தடையை 90 நாள்களுக்குள் முற்றாக நீக்கிவிடவேண்டும். படையினரின் கடற்கரை முகாம்களிலிருந்து இரண்டு கடல் மைல்களுக்கு உட்பட்ட பிரதேசம், துறைமுக வளாகம், துறைமுக நுழைவாயில், களப்பு, முகத்துவாரம் தவிர்ந்த ஏனைய கடல் பகுதிகளில் இரவும் பகலும் எதுவித கட்டுப்பாடுமின்றிச் சுதந்திரமாக மீன்பிடிக்கக்கூடிய நிலை இருக்கவேண்டும்.

அதற்கு மாறாக அரசாங்கம் இப்போது அரசாங்க வர்த்தமானி அறிவித்தல்மூலம் செய்துள்ள ஏற்பாட்டின்படி நிலைமை முன்னரைவிட மோசமாகியிருக்கிறது.

மீன்பிடி நடவடிக்கைகளைக் கண்காணிக்கத் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுகிறார்.

முல்லைத்தீவு, திருமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களின் கரையோரங்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன. இங்கெல்லாம் தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதி பெற்றே மீன்பிடிக்கவேண்டும்.

கட்டுப்பாட்டை மீறி நடப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் சிறைவாசம் அனுபவிப்பதோடு அபராதமும் செலுத்த நேரும்.

இவற்றையெல்லாம் எதிர்த்து மீனவர்கள் போராட்டம் நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

அரசியல் பணிகளுக்காகத் தீவுப் பகுதிகளுக்குப் புலிகள் சுதந்திரமாகச் செல்லமுடியாமல் அரசு 12 நிபந்தனைகளை விதித்திருக்கிறது. இதுவும் உடன்படிக்கைக்கு முரண்.

அரசாங்கமே புரிந்துணர்வு உடன்படிக்கையை மதிக்காமல் நடந்துகொண்டால் படையினரைப் பற்றிக் கேட்கவாவேண்டும்? கடற்படையினர் ஒரு பக்கம் தமது கைவரிசையைக் காட்டி வருகிறார்கள். அம்பாறை மாவட்டத்தில் விசேட அதிரடிப் படையினர் பொதுமக்களுக்கும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுக்கும் சவப்பெட்டிப் பயமுறுத்தல் விடுத்து வருகிறார்கள்.

மொத்தத்தில் 100நாள்களில் புரிந்துணர்வு உடன்படிக்கை பொலபொலத்துப் போய்விட்டது! இந்த நிலையிலும் அது இலக்கை அடையுமானால் உலக அதிசயம் ஒன்று நிகழ்ந்ததாகவே கொள்ளலாம்.

## இனங்களிடையேயான நல்லிணக்க அமைப்பைச் சேர்ந்த 80 பேர் வருகை

கொழும்புத்துறை,ஜூன்5

தென்னிலங்கையில் இனங்களுக்கிடையேயான நல்லிணக்க அமைப்பைச் சேர்ந்த 80 பேர் அடங்கிய குழுவினர் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

மனித முன்னேற்ற நடுநிலைய ஏற்பாட்டில் வருகை தந்துள்ள இக்குழுவினர் எதிர்வரும் 5 ஆம் திகதிவரை குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புகள் மற்றும் பொது மக்களைச் சந்தித்து உரையாடி கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வர்.

இவர்களது பயணம் சமாதானத்திற்கு வலுவூட்டும் நிகழ்வாகவும், தமிழ் மக்களின் அபிலாஷைகளை தென்பகுதி மக்களுக்குத் தெளிவுபடுத்தும் நல்லிணக்க முயற்சியாகவும் அமையும் என மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட்திரு சி.ஜி.ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நயினாதீவுக்குச் சென்று மத வழிபாட்டுத் தலங்களை தரிசித்த இவர்கள் அங்கு பொதுமக்களையும் சந்தித்து உரையாடினார்.

யாழ்.நகரப் பகுதி தென்மராட்சி மற்றும் பிரதேசங்களின் யுத்த அழிவுகளையும் பார்வையிட்டுச் செல்வர் என அறிவிக்கப்படுகிறது. (ம-ரி)

## நாட்டு நடப்பு

### நஞ்சையே உண்கின்றாரே!

*கத்தரிக்காயில் நஞ்சு*
*கறிமிளகாய்க்கு நஞ்சு*
*நித்தமும் கோவாவுக்கு*
*நிதானமாய் தெளிப்பர் நஞ்சு*
*அத்தனை காய்கறிக்குமிப்போ*
*அயராது நஞ்சு பாய்ச்சி*
*பொத்தியை முறித்துவிட்டு*
*பொதிகட்டி நஞ்சு வைப்பர்*
*இத்தனை நஞ்சும் ஒன்றாய்*
*இடையறாது உடலில் சேரின்*
*செத்திட 'கான்சர்' அன்றி*
*செப்பவோர் நோயும் உண்டோ?*

- விகடகவி

## குடாநாட்டின் பனைவளங்கள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன!

### தடுக்கும்படி பனம்பொருள் கூ.ச.சமாசம் பிரதமரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்5

நாட்டின் யுத்த அனர்த்தங்கள் காரணமாக வடக்கில் 25 லட்சம் பனைகளும் 9 லட்சம் தென்னைகளும் அழிக்கப்பட்டன. தற்போது நாட்டில் இயல்புநிலை தோன்றியுள்ளபோதும் இவ்வழிவு நடவடிக்கைகள் இராணுவத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினர் பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

சமாசத்தில் 42 பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் உடலுழைப்பை மூலதனமாகக்கொண்ட 15ஆயிரம் குடும்பங்களும் சங்கப் பணியாளர்களாக அங்கம் வகிக்கும் 2 ஆயிரம் குடும்பங்கள் உள்ளிட்ட ஒரு லட்சம் மக்களும் பனை, தென்னை வளங்களையே தம் ஜீவனோபாயத்திற்குப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வளங்களை மீண்டும் மீள்நடுகைமூலம் பெற்றுக்கொள்ள நீண்டகாலமும், கோடிக்கணக்கான பணமும் செலவிடப்படவேண்டும். இவ்வழிவு எமது வாழ்வில் நீண்டகாலப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் கூட்டுறவு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், இந்துகலாசார அமைச்சர், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, யாழ்.அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ம-13)

## குடாநாட்டில் இளம்வயதினரே உளரீதியாகப் பெரும் பாதிப்பு

### சமூக நலன்புரி அமைச்சர் கவலை

வலி.மேற்கு,ஜூன்5

யுத்த அனர்த்தங்களால் உருக்குலைந்த குடாநாட்டில், பெரியவர்களைவிட இளம்வயதினரே உளரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு தெரிவித்தார் சமூக நலன்புரி அமைச்சர் ரவீந்திர சமரவீர.

கடந்தவாரம் வடபகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர், யாழ். வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் இடம்பெற்ற உளவளத் துறைப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

யுத்தத்தினால் வடபகுதியில் பெரும் எண்ணிக்கையான இளம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். இளம் வயதினர் உளரீதியாகப் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். இளம் சந்ததியினர் யுத்தம் இன்றி வடபகுதியில் வாழவேண்டும் என்ற மனோநிலையைக் கொண்டிருப்பதை உணரமுடிகிறது. நாம் அனைவரும் ஒன்றுதிரண்டு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அயராது உழைக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உளவளத்துணை ஆலோசனை நிலையம் ஒன்று மிகவிரைவில் அமைப்பதற்கு சமூக நலன்புரி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

- என்று தெரிவித்தார்.

உளவளத்துணை தொடர்பான மேற்படி பயிற்சிப் பட்டறை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அலுவலர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள் ஆகியோர்களுக்கு சமூக நலன்புரி அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

சமூக நலன்புரி அமைச்சின் தேசிய ஆலோசனைச் சபையின் விரிவுரையாளர் ஏ.எல்.எச்.எம்.இப்ராகிம் உட்பட பலர் விரிவுரையாற்றினார்கள். (ஒ-175)

## உதவிவழங்கும் நாடுகள் கூட்டம் இன்று கொழும்பில் ஆரம்பம்

கொழும்பு,ஜூன்5

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் குழுக்கூட்டம் இன்று கொழும்பில் ஆரம்பமாகின்றது.

இரண்டு நாள்கள் நடைபெறவிருக்கும் இந்தக் கூட்டத்தில் ஐ.நா. உறுப்பினர்கள், இலங்கைக்கு உதவி செய்யும் நாடுகளின் நிறுவனங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் முதலானோர் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

நாட்டில் அமைதிச் சூழல் காணப்படுவதால் இம்முறை இக்கூட்டம் இங்கு நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் ஜனாதிபதியும் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம், பிரதமர் தலைமையிலான விசேட அமர்வும் இக்கூட்டத்தில் இடம்பெறவுள்ளது. (ம-12)

### நாளை

வைகாசி 23
வியாழக்கிழமை
(06.06.2002)
திதி : ஏகாதசி
பின்னிரவு 2.16 வரை.
நட்சத்திரம்: ரேவதி
மாலை 6.20 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 7.22 - 8.52
ராகுகாலம : 1.22 - 2.52
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உன்னை நீ மன்னிப்பதைப்போல், நீயும் மற்றவர்களை மன்னித்து விடு.

## மின் விநியோக 'பியூஸ்' வெடித்ததால் யாழ்.ஆஸ்பத்திரியில் திடீர் பதற்றம்!

### நேற்றுமுன்தினம் மாலை சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ்.போதனா வைத்தியசாலையில் மின்மாற்றியில் உள்ள 'பியூஸ்' திடீரென வெடித்ததால் ஏற்பட்ட சத்தத்தினால் வைத்தியசாலைப் பணியாளர்கள், நோயாளர்கள், ஆஸ்பத்திரி வீதியால் சென்றுகொண்டிருந்த பயணிகள் ஆகியோரைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

போதனா வைத்தியசாலை மின்விநியோகம் இதனால் சில மணிநேரம் ஸ்தம்பிதமடைந்தது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 4 மணிக்கு இச்சம்பவம் இடம் பெற்றது.

காகம் ஒன்று தனது கூட்டை அமைப்பதற்காக, நிலத்தில் இருந்து எடுத்துச்சென்ற சுமார் 2 அடி நீளமான மெல்லிய கம்பித்துண்டு ஒன்று மின்விநியோகக் கம்பிகள் இரண்டில் ஒரேநேரத்தில் சிக்கியதால் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கம்பியுடன் சென்ற காகம் கம்பியை விட்டுவிட்டுப் பறந்து தப்பித்துக்கொண்டது.

சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு விரைந்த மின்விநியோகப் பகுதியினர் வெடித்த 'பியூஸ்' இற்குப் பதிலாக வேறோர் 'பியூஸை' போட்டு சில மணி நேரத்தில் வைத்தியசாலைக்கான மின்விநியோகத்தைச் சீர்செய்தனர். (ம-15)

## பேட்டுக் கோழிக் குஞ்சுகள் சேவல்களாக மாறும் விந்தை

### குடாநாட்டில் அண்மைக்காலமாக அரங்கேறுகிறது

அச்சுவேலி,ஜூன்5


கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்டு வீதிக்கு வீதி-வீடுவீடாக - எடுத்துச்செல்லப்பட்டு மலிவுவிலையில் விற்பனை செய்யப்படும் பேட்டுக் கோழிக் குஞ்சுகளில் அநேகமானவை சேவலாகப் பால்மாறி விடுவதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்குக் கோழிக் குஞ்சுகள் எடுத்துவரப்பட்டுக் கொழும்பு விலையிலும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

வெள்ளைக் குஞ்சுகள் சேவல் என்றும் - கறுப்பு - பழுப்பு நிறக் குஞ்சுகள் பேடுகள் என்றும் கூறப்பட்டு 10 ரூபாவில் இருந்து 25 ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றன.

கூடிய விலையில் வாங்கிய பேட்டுக் குஞ்சுகளின் நிறம் சில தினங்களில் வெழுத்து பேடு சேவலாகப் பால் மாறிவிடுவதாக இக்குஞ்சுகளை வாங்கியவர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பில் அங்கீகரிக்கப்பட்ட பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு நோய் தடை மருந்துகள் ஊட்டப்பட்ட ஒருநாள் குஞ்சுகளில் பேடு 25 ரூபாவுக்குக் குறையாமல் விற்பனை செய்யப்படும்போது, அதே பண்ணைகளின் பெயரைக் கூறி, தரக்குறைவான, நோய்த் தடை மருந்துகள் ஊட்டப்படாத, சில தினங்கள் வளர்ச்சியடைந்த, கோழிக்குஞ்சுகள் கொழும்பு விலையிலும் குறைவான விலையில் யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகின்றது. (ம-11)






யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்த உலக வங்கி அதிகாரிகள் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும், உலகவங்கியின் தென்னாசியப் பிரதேச உதவித்தலைவர் திருமதி மியக்கோ மியூமிஷாவையும் (நடுவில்) அவரது குழுவினரையும், கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன், மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் ஆகியோரை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.





ஆயர் இல்லத்தில் நடந்த சந்திப்பில் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, அமைச்சர் மிலிந்த மொறகொட, சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் தலைவர் டி.ஆர்.அருமைநாயகம், உலக வங்கியின் இலங்கைக்கான இணைப்பாளர் மரியானா ஜெனோவா, சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் இணைச் செயலாளர் சு.பரமநாதன், நல்லை ஆதீனமுதல்வர், சமாதானச் செயலணிச் செயலர் பேர்னாட் குணதிலக, இராணுவத் தளபதி லயனல் பலகல்ல, அருட்திரு. சி.ஜி.ஜெயக்குமார், அருட்திரு. ஏ.ஐ.பேர்னாட் ஆகியோரை மேலேயுள்ள படங்களில் காணலாம். *(படங்கள்: தேவராஜன்)*

# நவீன அச்சுத்துறை தொடர்பான கருத்தரங்கு யாழ்ப்பாணத்தில்

## ஜூன் 16ஆம் திகதி நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்5

'இலங்கையில் நவீன அச்சுக் கைத்தொழில் துறை' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 16ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது.

இலங்கை அச்சகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

'நவீன அச்சுக் கைத்தொழிலின் அறிமுகம்' அதன் தற்போதைய நிலை; எதிர்கால நிலைமை, வர்த்தக துறையினருக்கும் மாணவர்களுக்கும் அச்சுத்தொழில் துறை மூலம் கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் ஆகிய விடயங்கள் குறித்து மேற்படி கருத்தரங்கில் கருத்துரைகள் வழங்கப்படும்.

16ஆம் திகதி காலை 9.00 மணிக்கு 'உதயன்' பத்திரிகை நிறுவன மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்வில் குடாநாட்டைச் சேர்ந்த அச்சுத்தொழில் துறை சார்ந்த வர்த்தக நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்குபற்ற வசதி செய்யப்படவுள்ளது.

கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்பும் அச்சுத்தொழில் துறையினர் தங்கள் விவரங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்பாக 'உதயன்' அலுவலகத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறு கருத்தரங்கின் ஏற்பாட்டாளர்களான இலங்கை அச்சகவியலாளர் சங்கம் கேட்டிருக்கிறது. (ஐ)

# இந்தியாவில் சந்தை வாய்ப்பு குறித்து இலங்கை ஆராயும்

## வர்த்தக கூட்டுக்குழு இன்று முதலாவது கூட்டம்

கொழும்பு,ஜூன்5

இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக் கூட்டுக்குழுவின் முதல் அமர்வு இன்றும் நாளையும் இந்தியாவில் நடைபெறும். வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தலைமையிலான 10 பேர் கொண்ட குழு இலங்கை சார்பில் இந்த அமர்வில் பங்குபற்றும்.

இந்த உடன்படிக்கையின் நடைமுறைகள் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பது இந்த அமர்வில் ஆராயப்படும்.

உடன்படிக்கையினால் இந்தியாவுக்கே அதிக நன்மைகள் கிடைக்கின்றன. இந்தியா 5,300 கோடி ரூபா பெறுமதியான பொருள்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்கிறது. அதே வேளை, இலங்கை 600கோடி ரூபா பெறு மதியான பொருள்களை மட்டுமே இந்தியாவுக்கு ஏற்மதி செய்கிறது. இந்தியாவில் மேலும் சந்தை வாய்ப்புக்களைப் பெறுவது குறித்து இலங்கை இக்கூட்டுக்குழு அமர்வில் ஆராயும்.

(ஐ)

# வவுனியா அரச அதிகாரிகள் யாழ்ப்பாணம் படையெடுப்பு!

## இதனால் அங்கு பணிகள் பாதிப்பு

வவுனியா,ஜூன்5

சமாதான சூழ்நிலையை அடுத்து வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் படையெடுக்கும் அரசாங்க அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. அரசாங்கத் திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் தனிப்பட்ட தேவைகளுக்காக இவ்வாறு யாழ்ப்பாணம் செல்கின்றனர்.

உயர் அதிகாரிகள் லீவில் சென்றுவிடுவதால் அவர்களின் அலுவலகங்களில் வேலைகள் பின்தள்ளப்பட்டுவிடுகின்றன. இதனால் அவசரத் தேவைகளைக் கூட நிறைவேற்றிக்கொள்ள முடியாதிருக்கின்றது என்று பொதுமக்கள் முறைப்படுகின்றனர்.

12 வருடங்களாக யாழ்ப்பாணம் செல்லாதிருந்த பெரும்பாலான அரசாங்க அதிகாரிகள் அடிக்கடி யாழ்ப்பாணம் செல்லத் தொடங்கியிருக்கின்றனர். (ஐ)

# கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுப் பிரிவு துடுப்பாட்டப் போட்டிக்கு மத்தியஸ்தர்கள் நியமிக்கப் படவுள்ளதால் சகல மத்தியஸ்தர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் கோரியுள்ளார்.

(ம)

# யாழ்.-பருத்தித்துறை பஸ் சேவை நீடிப்பு!

வடமராட்சி,ஜூன்5

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் இரவுநேர பஸ்சேவை பொதுமக்களின் வேண்டுகோளின் பேரில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு நெல்லியடி ஊடான இரவுநேர கடைசி பஸ் வண்டி இரவு 7 மணிக்கும், பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நெல்லியடி ஊடாக கடைசி பஸ் வண்டி மாலை 5.30 மணிக்கும் புறப்பட்டு வந்தன.

தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு கடைசி பஸ் இரவு 8 மணிக்கும் - பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்து நெல்லியடி ஊடான கடைசி பஸ் மாலை 6.00 மணிக்கும் புறப்பட்டு வருகின்றன.

இப்பாதையில் சேவையில் ஈடுபடும் கடைசி நேர பஸ்வண்டிகள் புறப்படும் நேரத்தை நீடிக்கவேண்டும் என பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ கடைசி நேர பஸ் வண்டிகள் புறப்படும் நேரத்தை நீடித்துள்ளது.

(ம-173)

# மயிலந்தனை படுகொலை வழக்கு: நீதிமன்றத்தை மாற்றக் கோரிக்கை

செங்கலடி,ஜூன்5

மயிலந்தனை படுகொலை வழக்கு விசாரணையை மட்டக்களப்பு நீதிமன்றுக்கு மாற்ற உதவுமாறு வழக்கின் சாட்சிகளான பொதுமக்கள், தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

மேற்படி வழக்கு விசாரணை தற்போது கொழும்பு மேல் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது.

வழக்கின் பிரதிவாதிகளான 23 படையினரும் பாதுகாப்புக் காரணங்களையிட்டு மட்டக்களப்பு நீதிமன்றுக்கு வரமறுத்தனர். இதை அடுத்தே வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது.

படுகொலைச் சம்பவத்தை அடுத்து மயிலந்தனை கிராம மக்கள் வாழைச்சேனையில் தொடர்ந்து தஞ்சமடைந்திருக்கிறார்கள். இதனால் சாட்சிகள் ஒவ்வொரு நீதிமன்ற அமர்வுக்கும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் கொழும்புக்குச் சென்று வருகிறார்கள். தற்போதைய அமைதிச் சூழ்நிலையை அடுத்து வழக்கு விசாரணையை மட்டக்களப்பு நீதி மன்றத்தில் நடத்தலாம் என்று சாட்சிகள் கருதுகின்றனர்.

கடந்த 1992ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி மயிலந்தனையில் நடந்த குரூர வெறியாட்டத்தில் 36 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்பது தெரிந்ததே.

(ம)

# சதுரங்கச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ்.இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன் நடத்தவுள்ள 9ஆவது வருடாந்த சதுரங்க சுற்றுப்போட்டிக்கு பாடசாலை, தனிநபர் மற்றும் அணிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் அதிபர் ஊடாகத் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 19ஆம் திகதிகசு முன் 'அதிபர், யாழ் இந்துக் கல்லூரி' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் வேண்டப்பட்டுள்ளது.

போட்டிகள் எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் காலை 9மணி முதல் 5 மணிவரை யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ம-ரி)

# பொ.ஐ.முன்னணி ஆதரவாளர்களை பழிவாங்குவதை நிறுத்தினாலேயே சமாதானத்துக்கு பூரண ஆதரவு

## அரசை எச்சரிக்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஜூன்5

பொ.ஐ.முன்னணியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களை பழிவாங்கும் எண்ணத்தை அரசுமுற்றாக நிறுத்தவேண்டும். அதன்பிறகே சமாதான முயற்சிகளுக்கு பொ.ஐ. முன்னணி தனது பூரண ஆதரவை வழங்கும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தமது கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர், ஜனாதிபதி, செயலக அதிகாரிகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினரைக் கொண்டு பொ.ஐ.முன்னணி ஆதரவாளர்களைப் பழிவாங்கும் செயல்களில அரசு ஈடுபட்டிருப்பதாகவும் ஜனாதிபதி குற்றஞ்சாட்டினார்.

இதனை உடனடியாக நிறுத்தாவிட்டால் சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்குவது குறித்து தாம் மறுபரிசீலனை செய்யவேண்டியிருக்கும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

(ம-4-12)

# அழிவின் விளிம்புக்கு எப்படி வந்தோம்?

## சிந்தனைத் தொடர் - 2

**ஆத்மசொரூபன்**

யுத்தத்தால் ஏற்படும் பொருளழிவுகள், உயிரிழப்புகள், உளவியில் ரீதியிலான பாதிப்புக்கள் மற்றும் நோக்கமற்ற பாடசாலை, பல்கலைக் கழகப் படிப்பினாலும், கலாசாரச் சிதைவினாலும் ஏற்படும் பற்பல பாதிப்புகள் மனித இனத்தை வாட்டி வதைக்கின்றன. இவற்றிற்குப் பரிகாரம் தேடமுடியாத அளவிற்கு மனிதன் இன்று பின்தள்ளப்பட்டுள்ளான். அவன் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் அவனை மேலும் சிக்கலுக்குள் தள்ளிவிடுகிறது. ஏன், உணவிற்காகச் செய்யப்படும் பாணில்கூட புற்றுநோயை உண்டுபண்ணும் 'அக்கிறலமைற்' என்னும் பொருள் இருப்பதாக சுவீடன் ஸ்ரொக்கம் பல்கலைக்கழகம் அறிவித்திருப்பதாக 24.04.2002 பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது.

பேரழிவிற்கு நாம் வந்திருப்பதற்கு பல வகையான காரணங்களைக் கூறலாம். எனினும், அதிமுக்கியமான காரணத்தை மட்டும் இங்கு நோக்குவோம். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருந்து அவனை ஆட்டிப் படைக்கும் காரணியை அறிந்து, அவற்றைச் சீர்செய்யும் அறிவு கல்வி மூலம் புகுத்தப்படாமையே மாபெரும் குறைபாடாகும். இந்த அடிப்படைக் குறைபாடே சகல குறைபாடுகளுக்கும் மூலகாரணமாகும். தங்களைத் தாங்களே புத்திஜீவிகளென்றும், கல்விமான்களென்றும், பேராசிரியர்களென்றும் கூறிக் கொள்பவர்கள் இதற்கு முக்கியத்துவம் கொடுக்காதது வெட்கக்கேடான செயலாகும்.

எம்முன்னேயிருந்து எம்மை ஆட்டிப் படைக்கும் மனம், ஒருகுரங்கு என்று சொல்லப்படுகிறது. ஆமாம், அது ஒரு விசர் பிடித்தகுரங்கு (Mad Monkey) என்று கூடச் சொல்லிவிடலாம். இந்த மனம் எந்தநேரமும் ஏதோ ஒன்றைக் கேட்ட வண்ணம் இருக்கும். அதைக் கொடுத்தாலும் அவற்றுடன் திருப்திப்படுவதில்லை. சொற்ப நேரத்திலேயே அது சலிப்படைந்து விடும். எப்பொழுதும் மனம் மாறிக்கொண்டேயிருக்கும். இந்த மனத்தைச் சீர்செய்வதற்கு மகாஞானிகள் பாதையைக் காட்டியிருக்கின்றார்கள். எனினும் அவற்றைப் புறக்கணித்துவிட்டு இன்று மனிதன் தான்தோன்றித்தனமாக உலகளாவிய ரீதியில் நடக்கிறான். அதற்குரிய பலனே இந்தப் பேரழிவுகள்.

மனிதன் அறியாமையால் செய்யும் பல தீய செயல்களில் ஒன்று சொற் துஷ்பிரயோகமாகும். ஆதாயம் தேடும் ஒரே நோக்கதிற்காக ஒழுக்கமற்றவனை - சமுதாயச் சீரழிவுகாரனை - கூட பகிரங்கமாக மேடைகளில் மகாத்மாவென்றும், சமூக சேவையாளரென்றும், தெய்வம் மாதிரியென்றும் கூட தனது மனச்சாட்சிக்கு விரோதமாக - போலித்தனமாக - புகழ்கிறார்கள். இவ்விழிய செயல் தனக்கும் சமூகத்திற்கும் என்ன பாதிப்பையேற்படுத்துகின்றது என்பதைக்கூட புகழுகின்றவனோ, அதைக் கேட்பவனோகூடப் புரிந்துகொள்வதில்லை.

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்டவடு" - என்று குறளில் கூறப்பட்டுள்ளது போல, இப்போலிப் பாராட்டுகள் பாரிய வடுவை மனதில் ஏற்படுத்துகின்றன. பாம்பு என்று நாம் உரத்து சத்தம் போட்டதும் பக்கத்தில் இருந்தவன் துள்ளிப் பதைத்து எழுவதை நாம் காண்கிறோம். பாம்பு என்ற சொல்லிற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற வலிமையே இச்சூழலை ஏற்படுத்துகிறது.

அபிவிருத்தி, முன்னேற்றம், மேம்பாடு, வளர்ச்சி, முற்போக்கு ... என்ற சொற்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும்போது வாழைப்பழத்தில் ஊசி ஏறுவதுபோல மெதுவாக எமக்குத் தெரியாமலே சொல்வோர் கேட்போர் அனைவரதும் உள்ளத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. அழிவு வேலைகளையெல்லாம் அபிவிருத்தி என்று சொன்னதாலேயே விஞ்ஞான அழிவுகள் பெருகியிருக்கின்றன. ஒழுக்கங் கெட்டவர்களைப் புகழ்ந்ததாலேயே இன்று உலகமே ஒழுக்கங் கெட்டு நிற்கின்றது.

ஒழுக்கங்கெட்டவனை மகாத்மா என்று புகழும்போது அது சிறுவர்களுக்கு மகாத்மா என்ற சொல்லுக்கு மதிப்பு இழிவாகக் காட்டப்படுகிறது. இத்தீமை கல்விமான்கள், புத்திஜீவிகள், பேராசிரியர்கள், அரசியல்வாதிகள் ... என்று சொல்லப்படுபவர்களின் மட்டத்திலேயே அதிகம் நடைபெறுகிறது. பாடசாலை, பல்கலைக்கழகங்கள் இவற்றைத் தடுப்பதற்குப் பதிலாகப் பெருக்கிக்கொள்கின்றன. யாரும் இதைப் பற்றிக் கவலைப் படுவதாகத் தெரியவில்லை.

இன்று அறிவு என்பது புத்தகங்களிலுள்ள மட்டுப்படுத்தப்பட்ட துறைகளிலுள்ள(Subject), மட்டுப்படுத்தப்பட்ட பரப்பிலுள்ள(Syllabus) விடயங்கள் மாணவர்களுக்குத் திணிக்கப்பட்ட பின்னர் நிகழும் பரீட்சையில் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் வெளிப்படுத்தும் ஆற்றலாகவே அமைகிறது. இந்த விடயங்களும் பணம் சம்பாதிப்பதை அடிப்படையாகக் கொண்டவையே. மனிதனின் பண்பையாகுதல் வளர்ப்பதாகக் கூடவில்லை. பரீட்சையில்கூடுதலாக வெளிப்படுத்தியவர்கள் பகிரங்கமாக, கண்மூடித்தனமாக பாராட்டப்படுகிறார்கள். இதனால் ஒழுக்கமற்றவனின் ஒழுக்கக் கேடுகள் அதிகரிக்கின்றன. கர்வம் வளர்கிறது. காலப்போக்கில் இவர்களது உணவு, உடை, குடும்ப, புற செயற்பாடுகளில் பாரிய மாற்றம் ஏற்படுகிறது. வறிய குடும்பத்தில் தந்தையுடன் கூலிவேலைக்குச் சென்ற மைந்தர்கள் கூட படிப்பிற்கும் பின்னர் அதை நிறுத்திக்கொள்வதுடன் கூலி வேலையைத் தரக்குறைவானதாகவும் நினைத்துக்கொள்கிறார்கள். தேவைகள் பெருகுகின்றன. ஆடம்பர வாழ்க்கையில் நாட்டம் ஏற்படுகின்றது. இதனால் பெற்றோருக்குப் பல வித நெருக்கடிகள் ஏற்படுகிறது. முன்பு உதவிய ஏழைப் பெற்றோரை, உறவினரைக்கூட தன் புதிய சகாக்களுக்கு அறிமுகம் செய்யமுடியாத அளவிற்கு நன்றி கெட்டுப் போலித்தனத்திற்கு வசப்படுகிறார்கள். இதனால் இவர்களது வசிப்பிடம் நகரை நாடியதாக அமைகிறது. பக்தி கடவுள்களில் இல்லாது பணம், பட்டம் பதவிகளில் ஏற்படுகிறது. இத்தகைய நிலையில் பகிடிவதை என்ற பெயரில் கொலைகள் கூடச்செய்யப்படுகிறது. இதனால் பல்கலைக்கழகம் பல்கொலைக்கழகம் என்று பிறரால் இழிவுபடுத்தப்படும் நிலைக்குத் தள்ளப்படுகிறது. கடமை கைவிடப்படுகிறது. வீட்டிலும் வெளியிலும் கூட போராட்டம், பொது உடைமை அழிப்பு, போதனாசிரியர்கள் உட்படப் பிறரைத் தாக்குதல் போன்ற சம்பவங்கள் நிகழ்கின்றன. இதற்கு முற்போக்கு என்று கூடச் சொல்லிக்கொள்ளப்படுகிறது.

> ... இன்று அறிவு என்பது புத்தகங்களில் மட்டுப்படுத்தப் பட்ட துறைகளில் (Subject) மட்டுப்படுத்தப்பட்ட பரப்பிலுள்ள (Syllabus) விடயங்கள் மாணவர்களுக்குத் திணிக கப்பட்ட பின்னர் நிகழும் பரீட்சையில் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் வெளிப்படுத்தும் ஆற்றலாகவே அமைகிறது...

சமூகத்திற்கும் இத்தகையவர்களுக்குமிடையே இடைவெளியை, முரண்பாடுகளை, வேற்றுமைகளை வழங்கியதும் பாடசாலைப் படிப்பினால் ஏற்பட்டதுமான அதை அறிவு என்று சொல்லலாமா? இவ்வளவிற்கும் பணவிரயமும், வாழ்க்கை விரயமும்தான் மிச்சம். இதுதான் இன்றைய அவலநிலை.

இருட்டிலே செல்ல சிறியவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் அஞ்சுவார்கள். காரணம் எதிரே இருப்பவைகளைக் காணமுடியாமையினால் அவற்றுடன் முட்டிமோதிக் கைகால்களை உடைத்துக்கொள்வது, அடுத்து விஷ ஜந்துக்களின் நடமாட்டம். இதேபோலத்தான் அறியாமை என்ற இருளில் இருப்பவனுக்குத்தான் வாழ்க்கைப் பயணத்தில் அச்சமேற்படுகிறது. தீய எண்ணங்கள் அவனது உள்ளத்தில் நடமாடுகின்றன. இருட்டில் அச்சமில்லாது செல்ல விளக்கு ஒளி உதவுவதுபோல வாழ்க்கைப் பயணத்தில் அச்சமில்லாது - இலக்கைப் பாதுகாப்பாகச் சென்றடைய எது உதவுமோ அதுதான் பேரறிவாகும். இத்தகைய அறிவை வழங்குவதுதான் பாடசாலைப் படிப்பின் நோக்கமாக இருக்கவேண்டுமே தவிர தனிமனித அழிவிற்கும் சூழல் மாசடைதல் உட்பட்ட உலக அழிவிற்கு வித்திடுவதாக இருப்பதல்ல. 'எதை அறிந்தால் வேறு எதையும் அறியத்தேவையில்லையோ அதுவே அறிவு' அந்த அறிவே மனித வர்க்கத்திற்குத் தேவை. ஒருவனுக்கு மிதமிஞ்சிய வறுமை ஏற்பட்டுவிட்டால் அது அவனை மட்டும் அழித்துவிடும். ஆனால் மிதமிஞ்சிய செல்வம் ஏற்பட்டுவிட்டால் அது உலகையே அழித்துவிடும். மிதமிஞ்சிய பணம் எதனையும் பணத்தால் செய்துவிடும் முனைப்பை ஏற்படுத்திவிடுகிறது. கலாசாரத்திற்கு ஒவ்வாத செயல்களையும் செய்வித்து விடுகிறது. பணக்காரனுக்கு எதிராகச்செயற்பட பலர் முன்வராமையினால் கலாசாரச் சிதைவு ஏற்படுகிறது. இதுவே இன்று எல்லாப் பட்டணங்களிலும் நிகழ்வனவாகும்.

மனிதனை வழிநடத்துவது ஒன்று கலாசாரம், மற்றையது பகுத்தறிவு. இரண்டும் இல்லையேல் ஒரே சீரழிவுதான். ஆகவே, நல்லது எது தீயது எது என்று பிரித்து இனங்கண்டு தீயவற்றை ஒதுக்கி, நல்லவற்றை போற்றும் பகுத்தறிவை வளர்த்துவிடுதல் கல்வியின் கட்டாய கடமையாகும். இதுவே உலகப் பேரழிவை தடுக்கும். விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களல்ல. இன்று உலகமெங்கும் அமைதிக்காக ஏங்குகிறது. அமைதி கிட்டுமா?

*(தொடரும்)*

## வட்டுக்கோட்டையில் நாளை நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஜூன்5

வட்டுக்கோட்டை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட பகுதி மக்களின் வளர்ப்பு நாய்களுக்கு நாளை வியாழக்கிழமை ஏ.ஆர்.வி.தடுப்பூசி மருந்து ஏற்றப் படவுள்ளது.

இதன் பிரகாரம், அன்றைய தினம் காலை 9மணிமுதல் 11 மணிவரை வட்டுக்கோட்டை கற்பகச் சோலை சனசமூக நிலையத்திலும், 11.30 மணி முதல் 2மணிவரை சங்கரத்தை குளத்தடி கிராம முன்னேற்றச் சங்கத்திலும் தடுப்பூசி ஏற்றுதல் நடைபெறும். மேற்படி பிரிவுமக்கள் தமது வளர்ப்பு நாய்களுக்கு அன்றைய தினம் தவறாது தடுப்பூசி மருந்தை ஏற்றிக்கொள்ளுமாறு வட்டுக்கோட்டைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ச.பரமேஸ்வரனால் கேட்கப்பட்டுள்ளது. (எ-15)

## தங்கநகைகள் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்5

முடமாவடி பூங்கனிச்சோலை வளாகத்தினுள் தவறவிடப்பட்ட தங்க நகைகள் சில கண்டெடுக்கப்பட்டு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் -

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அவற்றை பெற்றுக்கொள்ளுமாறும் - பூங்கனிச்சோலை நிர்வாகம் கேட்டுள்ளது. (ஔ-10)

## ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை விண்ணப்பம் கோரப்படுகின்றது

வலிகாமம் தெற்கு,ஜூன்5

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

2002ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக் கடமைக்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள், இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் திறக்கப்பட்டு ஒருவார காலத்திற்குள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)

## சமூகக்கல்வி தினவிழா

யாழ்ப்பாணம்,ஜூன்5

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய சமூகக்கல்வி தினவிழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய அதிபர் ந.இராசதுரை தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வேலணைக் கோட்ட செயலர் எஸ்.கே.சண்முகலிங்கம் கலந்துகொள்கிறார். (ம-9)

## நெடுந்தீவு நபருக்கு 'விஸா' வழங்க பிரிட்டிஷ் தூதரகத்துக்கு உத்தரவு!

### லண்டன் நீதிமன்றம் பிறப்பித்தது

லண்டன்,ஜூன்5

பிரிட்டன் செல்வதற்கு தனக்கு 'விஸா' வழங்க கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் மறுத்ததற்கு எதிராக லண்டன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த நெடுந்தீவைச் சேர்ந்த ஒருவருக்கு சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

நெடுந்தீவைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் என்பவர் பிரிட்டனில் உள்ள தனது பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் சென்று பார்த்துவிட்டுத் திரும்புவதற்கு 'விஸா' தருமாறு கோரி கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் கடந்த ஆண்டு டிசெம்பரில் விண்ணப்பித்திருந்தார். அவரது விண்ணப்பத்தைப் பரிசீலித்த தூதரக அதிகாரிகள், அவர் 'விஸா' கோருவதன் நோக்கத்தில் சந்தேகம் இருப்பதாகக் கூறி 'விஸா' தர மறுத்துவிட்டனர். இதனை ஆட்சேபித்து வே.சுந்தரலிங்கம் பிரிட்டனின் குடிவரவு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

தனது பிள்ளைகள் எவரும் சட்ட விரோதமாக பிரிட்டனுக்குள் நுழையவில்லை என்றும் -

தற்போது அவர்கள் சட்டபூர்வமாகவே பிரிட்டனில் வாழ்ந்துவருவதாகவும் - வாதிட்ட மனுதாரர் தரப்பு சட்டத்தரணி மருதையனார் அதற்குரிய ஆவணங்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். வே.சுந்தரலிங்கத்துக்கு 'ஸ்பொன்ஸர்'(SPONSOR) பொறுப்பு வழங்கிய குமாரசாமி கிருஷ்ணமூர்த்தி என்பவரையும் நீதிமன்றம் விசாரித்தது.

விசாரணையின் முடிவில் பிரிட்டிஷ் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் முறையீட்டாளரான வே.சுந்தரலிங்கத்துக்கு உடனடியாக 'விஸா' வழங்குமாறு கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்துக்கு உத்தரவிட்டுள்ளது. (ஒ)

## மதில் வீழ்ந்து காயமடைந்தவர் மரணம்!

யாழ்ப்பாணம்,ஜூன்5

வேகமாக வீசிய காற்றின் உந்துதலினால் சரிந்து வீழ்ந்த மதில் சுவரின் இடிபாடுகளுக்குள் அகப்பட்டு படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்தவர், நான்கு நாள்களின் பின் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று மரணமானார்.

யாழ்ப்பாணம் றக்காவீதியைச் சேர்ந்த 10ஆம் ஆண்டு மாணவனான மகேஸ்வரதாஸன் சுதர்சன் (வயது 14) என்பவரே உயிரிழந்தராவார்.

சடலம், மரணவிசாரணையின் பொருட்டு வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-152)

## பளை மத்திய கல்லூரி மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,ஜூன்5

பளை மத்திய கல்லூரியில் கல்வி கற்று தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் 11 மாணவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலைக்கு வருகை தருமாறு அதிபர் கேட்டுள்ளார். (ம)



யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ள மலேசிய நாட்டு உல்லாசப் பயணிகள் 'உதயன்' அலுவலகத்திற்கு வந்தசமயம் எடுக்கப்பட்ட படம். 'ஜெற்விங் ரவல்ஸ்' நிறுவனம் இந்தப் பயணிகளுக்கான பயண ஏற்பாட்டைச் செய்திருந்தது.

## கடல் நடுவில் நடந்த திருச்சொரூப ஆராதனை

யாழ்ப்பாணம்,ஜூன்5

கடலின் மத்தியில், பாஷையூர் இறங்குதுறையில் இருந்து இருநூறு மீற்றர்களுக்கு அப்பால் அமைந்துள்ள அந்தோனியார் திருச்சொரூப விழா நேற்று மாலை ஐந்து மணியளவில் புனித அந்தோனியார் தேவாலயப் பங்குத் தந்தை அருட்திரு. எம்.யேசுரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இப்பிரார்த்தனையில் நூற்றுக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

ஆசீர்வாதம் வழங்கும் பாவனையில் கடலைநோக்கி அமைந்துள்ள திரு உருவத்தின் பீடத்தைச் சுற்றி நாற்பதுக்கும் மேற்பட்ட சிறுவள்ளங்கள் நங்கூரமிட்டு நின்றன. அவற்றில் அமர்ந்த வண்ணம் ஆண்களும் பெண்களும் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர்.

பக்தர்களை ஏற்றி இறக்கும் பணியில் படையினரின் பாவனையில் உள்ள விசைப்படகொன்றும் ஈடுபட்டிருந்தது.

இவ்வாராதனையில் பாஷையூர்ப் பகுதியின் இராணுவக் கட்டளை அதிகாரி ரவிந்திரா கஹாவிற்றவும் கலந்துகொண்டார். பாதுகாப்புக் கடமையில் இராணுவத்தினருடன் ஆண், பெண் பொலீஸ் உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பிரார்த்தனையின் பொழுது இராணுவத்தினரின் விசைப்படகு, விழா நடைபெற்ற இடத்தை வலம் வந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தின் கொடியேற்றத்தை அடுத்து வரும் மூன்றாம் நாளில் இத்திருவிழா நடைபெறுவது வழக்கமாகும். (ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## பிறிமா கோழிக்குஞ்சுகள்

பிறிமா கைலைன் வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சுகளும் எம்மிடம் பதிவு செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள் ளலாம். தொடர்புகள்: மாருதி ரெக்ஸ், இல.1, பஜார்வீதி, யாழ்ப்பாணம்; சிற்றி காமென்ஸ், 535A, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (4365)

## விற்பனைக்கு

1 சிறி மைனர் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.ரவீந்திரகுமார், 596/5, K.K.S. வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (4461)

மைனர் 1000 1 சிறி 9065 கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.சோதிநாதன், No.46, அம்பாள்வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (4491)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்லின அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. (காலை 7.00 மணிக்கு முன்னர் பார்வையிடலாம்) தொடர்பு: K.வர தன், M.S.லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (4474)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி,நல்லூர். (4494)

## தவறிவிட்டது

சேச்லேன், தாவடியைச் சேர்ந்த தர்மலிங்கம் இரத்தினம் என்பவரு டைய தேசிய அடையாள அட்டை (இல.316960111V), விசேட அடை யாள அட்டை (இல.0906009649) ஆகியன தவறிவிட்டன. கண்டெடுத் தவர்கள் தயவுசெய்து த.சற்குண நாதன், நொதோன் மோட்டோர்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைத்து உதவவும். (4473)

திருமதி பர்னாந்து சின்னத்தங் கச்சி என்பவருடைய தேசிய அடை யாள அட்டை, வன்னிப்பாஸ், படம் என்பன அடங்கிய பேர்ஸ் யாழ்ப் பாணத்திலிருந்து ஆனைக்கோட்டைக் குச் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முருகன் செல்வம், 3ஆம் கட்டை, ஆனைக்கோட்டை என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும் (4496)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

25-05-2002 அன்று வவுனியாவில் இருந்து யாழ்.வந்த வானில் ஒரு பிரயாணப்பை (Bag) கண்டெடுக்கப் பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட் டிப் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: பொ.தவபாஸ்கரன், C/o S.T. மூர்த்தி, ஆஸ்பத்திரி வீதி, சங்கானை. (4495)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் வசிக்கும் குடும்பத் தினருடன் தங்கியிருந்து பணி புரி வதற்கு பணிப்பெண் தேவை. சம் பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப் படும். தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:து.செல்லையா, மஸ்கன்ஸ் லிமிடெட், 35, ஸ்ரான்லி வீதி, யாழ்ப் பாணம். (4466)

## SITUATION WANTED

Internal Auditor/Book keeper/Accountant. 31 years old youth with 6 years experience seeks employment in any one of the above Capacity. Advertiser: Advt.No. 1531, C/o. Uthayan . (4489)


## தூரிகை
நுண்கலை வளாகம்

**மனையியல் பயிற்சிகள்**

தென்மராட்சி மற்றும் தூர இடங்களிலிருந்து கலந்துகொள்ள விரும்புவோருக்கு:

★ நீங்கள் தேர்வு செய்யும் பயிற்சிகள் ஒரே நாளிலும் போக்குவரத்து வசதிக் கேற்பவும் நடைபெறும்:
★ துரிதமாகப் பயிற்சிகள் பூரணப்படுத்தப்படும். (2 மாதம்)
★ ஐசிங், Hair Style, தையல், கைப்பணி, துணிவர்ணமிடல், ஓவியம போன்றவை நடைபெறும்.
★ பதிவு செய்யும் கால எல்லை நீடிக்கப்பட்டுள் ளது.

- இயக்குநர்.

*பதிவு செய்க:*
1. செங்குந்தா வீதி, கல்வியங்காடு.
2. ம.ம.வி.வீதி, நெல்லியடி. (4493)


## கல்வி அதிகாரிகள் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூன்5

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் களுக்கான செயலமர்வு ஒன்று எதிர் வரும 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

விஞ்ஞானம், கணிதம், ஆரம்பக் கல்வி, முதல்மொழி, இரண்டாம்மொழி உட்பட 7 பாடங்களுக்கான இந்தச் செயலமர்வில் தவறாது கலந்து கொள ளுமாறு மாகாணக் கல்விப் பணிப் பாளர் அறிவித்துள்ளார். (ஒ-10)

## இராணுவ முகாம் பலப்படுத்தப்படுகிறது

அரியாலை,ஜூன்5

கொழும்புத்துறை சுவாமியார் வீதிப் பகுதியில் பொதுமக்களின் வீடுகளில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினர் தமது முகாம்களை பலப்படுத்தி வரு கின்றனர்.

இராணுவத்தினர் தொடர்ந்தும் மக் களின் குடியிருப்புக்களில் தங்கியிருப்ப தால் இப்பகுதியில் மக்கள் மீளக் குடி யமர்வதற்கு பின்னடித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-17)

## அலுவலர்கள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற கல்லூரிக்கான கட்டடங்களில் கட்டு மான பணிகளுக்கென அலுவலர்கள ஐவர் அண்மையில் நடைபெற்ற நேர்முகப்பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட 5 பேரை யும உடனடியாக தமதுகடமை களைப்பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு அறிவிககப்பட்டுள்ளது.

தெரிவான 5 பேரின் பெயர்கள் வருமாறு:

கே.சிறிஸ்கந்தராஜா (பிரதம பொறியியலாளர்), பி.யோகேஸ்வர ராஜா (தொழில்நுட்ப உத்தியோகத் தர்), எஸ்.ஆனந்தசிவம் (தொழில் நுட்ப உத்தியோகத்தர்), ஐ.ஏபரமேஸ வரன்(தொழில்நுட்ப உத்தியோகத் தர்),லோ.பிறேம்குமார் (தொழில்நுட்ப எழுதுவினைஞர்). (ஒ-10)


## வீடு வாடகைக்கு

மேற்படிப்புப் படிக்கும் அல்லது உத்தியோகத்தில் இருக்கும் பெண்கள் இருவருக்கு பெற்றோ ருடன் இருப்பதற்கு வீடு ஒன்று வசதியாக உள்ளது.

*விவரங்களுக்கு:*
பொ.வேலுப்பிள்ளை,
41/3, செம்மணி றோட்,
நல்லூர். (4487)


## மாணவர் எழுச்சி நாளில் கலந்துகொள்ளக் கோரிக்கை

யாழ்.மாவட்டத்தின் அனைத்துக் கல்வி வலயங்களிலும் நாளை இடம்பெறவுள்ள தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகளில் மாவட்டத் தின் சகல பாடசாலை மாண வர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனை வரையும் கலந்துகொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இந்தக் நிகழ்வுகள் யாழ். மத்திய கல்லூரி, நெல்லியடி மத் திய மகா வித்தியாலயம், மானிப் பாய் இந்துக் கல்லூரி, வட்டு இந் துக் கல்லூரி மற்றும் தீவகம், தென் மராட்சிக் கல்விவலயப் பாடசாலை கள் ஆகியவற்றில் இடம்பெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ம-10)

## கல்வி அலுவலர்களுக்கு கணனிப் பயிற்சி

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி வலயங்களில் பணியாற்றும் உத்தியோ கத்தர்களின் மனிதவள தரவுகள் பற்றிய வினாக்கொத்து ஒன்று மாகா ணக் கல்வி அமைச்சினால தயாரிக கப்படவுள்ளது

இந்த வினாக்கொத்து தொடர்பான கணனிப்படுத்தல் பயிற்சி வகுப்பு எதிர்வரும் 11ஆம் திகதி காலை 10.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூ ரியில் இடம்பெறவுள்ளது.

இந்த பயிற்சி வகுப்புக்கு ஒவ் வொரு வலயத்திலும் உள்ள திட்ட மிடற் பணிப்பாளரின் மேற்பார்வை யில் கணனிப் பயிற்சி பெற்ற இரு உத்தியோகத்தர்கள் வினாக்கொத் தின் பூரணப்படுத்தப்பட்ட 20 பிரதிக ளுடன் சமுகமளிக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் சி.சிவ ராஜா கேட்டுள்ளார். (ஒ-10)


## வெற்றுச் சோடாப் போத்தல்கள் கொள்வனவு செய்யப்படும்

கொக்காகோலா, பன்ரா, ஸ்பிறைற், போட்டல்லோ வெற்றுச் சோடாப் போத்தல்கள் கொள்வனவு செய்யப்படும்.

விவரங்களுக்கு:

**நியூ பாலகிருஷ்ணன் ஸ்ரோர்ஸ்**

164, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.
(ஈழநாடு காரியாலயத்துக்கு அருக ல், வெள்ளாந்தெருச் சந்தியில்)
T.Phone - 3212 (4500)

## பதவி வெற்றிடம்
அருணஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்
WALK- IN- INTERVIEW

எமது நிறுவனத்தில் விற்பனையாளராகப் பணி யாற்றுவதற்கு உடனடியாக ஆள் (ஆண்) தேவை. கல்விச்சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், நற்சாட் சிப்பத்திரம் போன்ற ஆவணங்களுடன் நேரில் வருக.

விளையாட்டுத் துறையில் ஈடுபாடுள்ளவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

❖ *வேலை நாள்களில் காலை 10 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை நேர்முகப் பரீட்சைகசு வரலாம்.*

**அருணஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்**
347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/22395)



### மீண்டும் யாழ்.குடாநாடெங்கும் விற்பனையாகிறது
## "வெளிச்சம்"

(கலை, இலக்கிய, சமூக இதழ்)

*12 வருடங்களாக எம் மண்ணிலிருந்து தொடர்ந்து வெளிவந்து விடிவிற்கு ஒளி பரப்பும் கலை, இலக்கிய சமூக சஞ்சிகை*

கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள், விமர்சனங்கள், அரசியல் சமூகம் சார்ந்த கட்டுரைகள், போரியல் வரலாற்று விவரணங்கள், நிகழ்வின் பதிவுகள், ஓவியங்கள், புகைப்படங்கள், போராளிகளின் படைப்புக்கள் இன்னும் பலவற்றைத் தாங்கி வரும்

**வெளிச்சத்தின் சித்திரை மாத இதழ் இப்போது விற்பனையாகின்றது!**

இந்நூல் குடாநாட்டின் பிரபல்யமான எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

தொடர்புகளுக்கு:
"வெளிச்சம்"
விடுதலைப் புலிகள்
கலை பண்பாட்டுக் கழகம்.

*4ஆம் வட்டாரம்,*
*புதுக்குடியிருப்பு,*
*முல்லைத்தீவு.* (4498)


எழுத்து, பேச்சு, ஊடகம் ஆகியவற்றின் சுதந்திர உரிமைக்காக உயிர் பறிக்கப்பட்ட உண்மையாளன்

# மயில்வாகனம் நிமலராஜன்

அவர்களது

## 41ஆவது பிறந்தநாள் நினைவு



நிமல்
குருஷேத்திர
மையத்திலிருந்து
தன்னின மக்களின்
உரிமைக்காக
தனது பேனாவை
ஆயுதமாக்கி
உறுதியாய்
குரல் தந்தவன்!
இவன்
மரணிக்கவில்லை!
நீங்காத நினைவாக
நீக்கமற
நிறைந்துள்ளான்!

(சி-22387)

செய்திக்காக : 05.06.1961
செய்தியாய் : 19.10.2000

- குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

*உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோயில் பரிபாலன சபையின் முன்னாள் தலைவரும் தற்போதைய பொருளாளருமான*

### கணபதிப்பிள்ளை பஞ்சலிங்கம்

அவர்களின் திடீர் மறைவினால் நாம் மிகவும் கவலையடைகின் றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் கண்ணீர் அஞ்சலி யைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மாசாந்தியடையப் பிரார்த் திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செ.சண்முகநாதன் குடும்பத்தினர்
(ஆனந்தன்)

*கற்பகப்பிள்ளையார் கோயிலடி,*
*உடுவில் கிழக்கு.* (4499)

## Business College - VAVUNIYA

வவுனியாவில CIMA, ACS, AAT வகுப்புக்கள் ஆரம்பம்.
வடமாகாண மாணவர்களின் நலன்கருதி வவுனியாவில் CIMA, ACS, AAT வகுப்புக்கள் ஆரம்பம்.

காலம்: 09.06.2002 ஞாயிற்றுக்கிழமை

**2002 NOVEMBER EXAMINATION**

(வெளிமாவட்ட மாணவர்களில் ஆண்கள் மட்டும் விடுதி வசதி பெற்றுக்கொள்ளலாம்)

தொடர்புகளுக்கு: ELITE COMPUTINAS AND BUSINESS COLLEGE,
No.30, STATION ROAD, VAVUNIYA.
T.P: 024-20111
(4488)


## பிறந்த நாள் நினைவு
# 75ஆம் ஆண்டு நிறைவு

மலர்வு 05 - 06 - 1927



உதிர்வு 15 - 04 - 2002

இறைவனடி சேர்ந்த
**திருமதி ஈவ்லின் இராஜமலர் அம்பலவாணர்** அவர்கள்

"நான் மன்றாடிய நாளிலே எனக்குச்
செவிசாய்த்தீர்; என் ஆன்மாவுக்குப்
பலமளித்து என்னைத் தைரியப்படுத்தினீர்" (திருவிவிலியம்)

அன்னாரின் அகவை எழுபந்தைந்தாவதின் நிறைவையிட்டு நன்றி நிறைந்த உள்ளத்துடன் இறைவனைப் போற்றுகின்றோம்.

*கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரி,*
*சுன்னாகம்.*
வணபடி.ஆர்.அம்பலவாணர் குடும்பத்தினர். (4411)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 - 02 - 1978



மறைவு 17 - 05 - 2001

**திருமதி சர்மினி பரமேஸ்வரன்**

*திதி: 05.06.2002 அபரபக்க தசமி*

தென்னையின் இளநீர் போல
தென்றலின் இனிமை போல
இதமாகப் பேசுவாயம்மா!
உம்மை இழந்து நாம் இன்று
ஆறாத் துயரில் வாடுகின்றோம் அம்மா!

தகவல்:
ஐ.குணரத்தினம் (தந்தை)
(பனை அபிவிருத்திச் சபை சரசாலை.)

*இல.82,*
*கச்சேரி கிழக்கு ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*
(4490)

## இதய அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தலைவர்
*ந.குகபரன்* அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி கமலாவதி நவரட்ணம்**

அவர்கள் இறைவனடி சேர்ந்தமையையிட்டு நாம் ஆழ்ந்த கவலை அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆன்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தமிழ் மன்றம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்திருநெல்வேலி.
(4497)

## மரண அறிவித்தல்

**Dr.ஆத்மநாதசர்மா சோமநாதசர்மா**

(முன்னாள் வைத்தியர், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த Dr.ஆ.சோமநாதசர்மா (Dr. சர்மா) இந்தியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற க.வை.ஆத்மநாதசர்மா-கோமதியம்மா தம்பதிகளின் மூத்தபுதல்வரும், மோகனாவின் அன்புக்கணவரும், வைத்தியநாதசர்மா, விஸ்வநாதசர்மா, சபாநாதசர்மா, சாவித்திரி நடராஜன், ஜோதிநாதசர்மா, கோமதி - ராம்கோபால், லலிதா ராம்தாஸ், சுவாமிநாதசர்மா, உமாராணி கமலகாந்தமுருகன் ஆகியோரின் அன்புத் தமையனாரும், ஹேமாகார்த்யாயினி ராகவன், மீனா, பிரியதர்ஷினி யசோமன், ராகவன் சுப்பிரமணியசர்மா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (05.062002) புதன்கிழமை கீழ்காணும் முகவரியில் நடைபெறும்.

*இல.6/39, மத்தியதெரு,*
*நாட்டரசன் கோட்டை,*
*சிவகங்கை மாவட்டம்,*
*தென் இந்தியா.*

தகவல்:
ஆ.விஸ்வநாதசர்மா
271/8, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.
(4486)

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சித்திரபாநு வருடம் வைகாசி மாதம் 23ஆம் நாள் (06.06.2002) வியாழக்கிழமை காலை 10.58 மணிமுதல் 12.41 மணிவரையுள்ள சிங்கலக்கினமும் ரேவதி நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபமுகூர்த்த வேளையில்

எமது ஏகபுத்திரன்
திருநிறை செல்வன்
**ஸ்ரீ கிருஷ்ணன்**
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**ஷாழினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி கி.ஸ்ரீதரன்
*முருகமூர்த்தி வீதி,*
*நெல்லியடி,*
*கரவெட்டி.*

திரு.திருமதி நா.புவனேந்திரன்
(இந்திரா கபே)
*பொன்கந்தையா வீதி,*
*நெல்லியடி, கரவெட்டி.*

(இருவீட்டார் அழைப்பு)
(4492)



உ
புங்குடுதீவு - பெருங்காடு

## அருள்மிகு கிராஞ்சயம்பதி கந்தசுவாமி தேவஸ்தான

புனராவர்த்தன அஷ்ட பந்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேக விழா

முருகன் அடியார்களே!

நிகழும் மங்களகரமான சித்ரபானு வருஷம் வைகாசித் திங்கள் 24ஆம் நாள் (07.06.2002) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.56 மணிமுதல் 12.37 மணிவரையுள்ள சிங்க லக்கின சுபமுகூர்த்தத்தில் கலியுகவரதனாம் ஸ்ரீமுருகப் பெருமானுக்கு குடமுழுக்கு, பெருஞ்சாந்தி எனப்படும் மகா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

### கிரியைகள் விவரம்

05.06.2002 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகும்.
06.06.2002 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.
07.06.2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.56 மணிக்குமேல் மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதம குரு:
*சிவாகம கலாநிதி சிவஸ்ரீ* மு.பரமசாமிக் குருக்கள் (கோப்பாய்)

★ *முருகன் அடியார்கள் அனைவரும் கும்பாபிஷேகத்தைக் கண்டு தரிசித்து பால், தயிர், இளநீர், பூ, பழவகைகள் முதலியவற்றையும் தந்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.*

- ஆலய பரிபாலன சபையினர்.
(4457)

## தமிழீழ வைப்பகம்
# பணிநிலை வெற்றிடம்

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

*பணிநிலை:* அலுவலர் (பயிலுநர்)/கணக்காய்வாளர் (பயிலுநர்)

*தகைமை:* ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் வணிக/முகாமைத்துவப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.
அல்லது
ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றின் H.N.D.A. கற்கைநெறியில் தேர்ச்சியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

*ஊதிய அளவுத் திட்டம்:* 3200 + 2500
*அகவை எல்லை:* 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்கவேண்டும்.

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவு செய்யப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பணிநிலை வேண்டுகை" எனக் குறிப்பிடப்பட்டு 2002.06.12ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும், யாழ்.குடாநாட்டில் இயங்கும் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேலாளர்,
ஆளுகை,
நடுவப் பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

*குறிப்பு:* நிறைவு செய்யப்பட்ட வேண்டுகைகளை தபாலில் நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம்.
யாழ்.குடாநாட்டு வேண்டுகையர்கள் யாழ்.குடாநாட்டு பணிமனை ஊடாக அனுப்பி வைக்கலாம்.

(சி-22393)

## தமிழினத்தைச் சீரழிக்கும்
# இழிசெயல்களில் ஈடுபடுபவர்கள் எவராக இருந்தாலும் திருந்தவேண்டும்
## சுன்னாகம் கூட்டத்தில் இளம்பரிதி வலியுறுத்து

வலி.வடக்கு,ஜூன்5

சமூகச் சீரழிவுகள், கசிப்பு உற்பத்தி, மக்களின் இயல்பான வாழ்க்கையை குழப்புதல், துரோகத்தனங்கள், துரோகத்தனங்களுக்கு உடந்தையாக இருத்தல், ஈழத்தமிழரின் உரிமைக் கோரிக்கையை மழுங்கடித்தல் போன்ற இழிசெயல்களில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் திருத்த நடவடிக்கை எடுப்போம். இதுவரை அத்தகைய செயல்களில் ஈடுபட்டவர்கள் இனி மேலாவது திருந்தி நடக்கவேண்டும்.

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் விளக்கக் கூட்டம் சுன்னாகம் மயிலணியில் எம்.சத்தியபாலன் தலைமையில் இடம்பெற்றது. அதில் உரையாற்றியபோதே இளம்பரிதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் ஆயுத கலாசாரத்தை உருவாக்கி வாழ்பவர்கள் அல்ல. நாங்களும் மனிதர்களாக வாழவேண்டும், நிம்மதியாக வாழவேண்டும், சுதந்திரமாக தலைநிமிர்ந்து எமதுமக்கள் வாழவேண்டும் என்பதற்காகவே போராட்டத்தை ஆரம்பித்தோம்.

மக்களும் நாங்களும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு இப்போராட்டத்தை முன்னெடுத்தோம். மக்களால் உந்தப்படுகின்ற போராட்டத்தை எந்த ஆயுத பலத்தாலும் அழிக்கவோ அன்றி சிதைக்கவோ முடியாது. அந்த வகையில் எமது போராட்டமும் மக்களினால் உந்தப்படுகின்ற ஒரு போராட்டமாகும்.

எமது போராட்டத்திற்கு பல்வேறு வழிகளிலும் அழிவுகள், அச்சுறுத்தல்கள் ஏற்படுத்தப்பட்டபோதிலும் போராட்டம் ஏறுமுகமாக சென்றதேயன்றி இறங்குமுகமாக செல்லவில்லை. இதன் அடிப்படையில்தான் தேசிய தலைவர் போராட்டத்தை ஆரம்பிக்க திட்டம் இட்டபோதே 'இப்போராட்டம் வெற்றிபெறும்' என்று கூறினார்.

பல்வேறு வகையான சலுகைகளைக் காட்டுவதன்மூலமோ - ஆசை காட்டுவதன்மூலமோ - எம்மக்களை போராட்டத்தில் இருந்து பிரித்துவிட முடியாது.

"நாங்கள் வன்னியிலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு வரும்போது 'மக்கள் உங்களுடன்தான் இருக்கிறார்கள். போராட்டத்திலிருந்தும் விடுதலைப் பாதையில் இருந்தும் அவர்கள் பிரிந்து செல்லவில்லை உங்களுடன் என்றும் இணைந்திருப்பார்கள்' என்று தலைவர் கூறினார்.

கடந்த காலத்தில் யாழ்.குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி செல்லும்படி நாங்கள் கேட்டபோது விடுதலைக்காக உங்கள் சொத்து, சுதந்திரம் யாவற்றையும் உடனே உதறி எறிந்துவிட்டு சென்றவர்கள் நீங்கள்.

உடலும் உயிருமாக வாழும் எங்களையும் உங்களையும் யாரும் பிரிக்கமுடியாது.

எமது விடுதலைப் போராட்டத்தை அழிக்கவென சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்களால் எதையும் சாதிக்க முடியாது என்பதை மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

தந்தை செல்வா அன்று நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இனத்தவரைப் பார்த்துக் கூறினார் "நாங்கள் உங்களுடன் சமாதானமாக வாழ விரும்புகிறோம், சமத்துவமாக வாழ விரும்புகின்றோம், நிம்மதியாக வாழ விரும்புகின்றோம். ஆனால் நீங்கள் இதற்கு சம்மதிக்கவில்லை. இது குறித்து பேசவும் மறுக்கின்றீர்கள். இன்று எம்முடன் நீங்கள் பேசாவிட்டால் நாளை உங்களுடன் நம்மில் எவரும் பேசமாட்டார்கள்.

"அடுத்த தலைமுறை கையில் துப்பாக்கி ஏந்திநிற்கும். எம்மக்களின் விடுதலையையும் தன்மானத்தையும் மீட்டெடுக்கும். அப்போ உங்களால் எதுவும் செய்யமுடியாது" என்று கூறினார்.

வன்னியில் பல முனைகளிலிருந்தும் இராணுவத்தை நகர்த்தி எம்மை அழிக்க இராணுவம் பல்வேறு திட்டங்களையும் செயறபடுத்தியது. அந்த நேரத்தில் நாம் பெரும் நெருக்கடியான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம. போதிய ஆளபலமின்றி பெரும கஷ்டத்திற்கு உள்ளாகினோம்.

அத்தகைய நெருக்கடியான காலகட்டத்தில்கூட நாம் கட்டாய இராணுவத்திற்கு ஆள்சேர்க்கவில்லை. போராட்டத்தை தலைவர் அப்போது மக்கள் மயப்படுத்தினார்.

இதனால் கிராம மட்டத்தில் இருந்த பெரியவர்கள் தாமே முன்வந்து ஏனையவர்களுடன் கதைத்து மக்கள் மத்தியில் பாரிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். கிராமியப் படையாக மாறி எம்முடன் இணைந்துகொண்டார்கள். நாங்கள் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்தோம். அதனைத் தொடர்ந்து அவர்கள் போருக்குப் புறப்பட்டார்கள்.

சுமார் 12 சதுர மைல்கள் பரப்பைப் பாதுகாக்கும் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இதன் மூலம் ஒருவார காலத்தில் எதிரியின் பல முனைகளிலிருந்தும் ஏற்பட்ட முன்னேற்ற நடவடிக்கைகள் முறியடிக்கப்பட்டு இராணுவம் தனது எல்லைக்கு ஓடியது.

ஓடிய இராணுவம் எல்லையில் முற்கம்பிவேலி அமைப்பதுபோன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. எதிரிக்கு நன்கு தெரியும் புலிகளின் யுத்த தர்மம் பற்றி. எமது எல்லையில் இருந்து நாம் ஓர் அடிகூட அதிகமாகக் கைப்பற்ற மாட்டோம். அடுத்தவன் நிலத்தைப் பறிக்கமாட்டோம்.

நாங்கள் பலமாக இருந்தமையால்தான் இன்று யுத்தநிறுத்தம் ஏற்பட்டுள்ளது. மேலும் நாம் பலமடைந்தால்தான் சமாதானத்தையும், நிம்மதியையும் நாம் இந்த மண்ணில் நிலைநிறுத்திக் கொள்ளமுடியும். இதனை நாம் ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஆள்பலத்திலும் பொருளாதாரப் பலத்திலும் நாங்கள் இன்று உயர்ந்து நிற்கவேண்டியது அத்தியாவசியமானதாகும். இன்று எம்முடன் சமாதான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நோர்வே நாடு போர்புரியும் நாடு அல்ல. ஆனாலும்கூட வருடாவருடம் இராணுவத்திற்கு ஆள்சேர்த்துக் கொண்டுதான் இருக்கிறது. பலமாக இருந்தால்தான் எம்மையும் மதிப்பார்கள்.

நாம் இன்று 'சைனட்' குப்பிகளை கழற்றி வைத்துவிட்டு வந்தால் உங்களால் என்னை ஏற்றுக்கொள்ள முடியாது. அதேபோன்று எங்களுடன் பலமாக இருப்பதற்கும் ஏனையவர்கள் மதிப்பதற்கும் நாமும் பலமாக இருக்கவும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவும் எங்களுடன் நீங்களும் இணைந்துகொள்ளவேண்டும்.

தற்போது இம்மண்ணில் லஞ்சம், ஊழல் போன்றவை மலிந்து காணப்படுகின்றன. இவற்றை முறியடிக்க வேண்டுமானால் நீங்கள் எங்களுடன் இணைந்து உறுப்பினர்களாக சேர்ந்து கொள்ளவேண்டும். 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரையும் எம்முடன் அரசியல் நடவடிக்கைகளுக்காகவும் அபிவிருத்திப் பணிகளுககாகவும் எம்முடன் இணைத்துக கொள்கின்றோம்.

நாடுகள் தமது மக்களின் நல்வாழ்விற்கு செலவு செய்யவே வரிகளை விதிக்கின்றன. அந்த வகையில் எமக்கென்றும் ஒரு நாடு இருப்பதினால் நாமும் குறிப்பிட்ட அளவு வரி விதிக்கின்றோம்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட போரினால் பாதிக்கப்பட்வர்களையும், அநாதைகளாக்கப்பட்டபிள்ளைகளையும், விதவைகளாக்கப்பட்டவர்களையும், அங்கவீனமானவர்களையும் பராமரிக்க எமக்கு பணம் தேவைப்படுகிறது.

அதைவிட மண்ணின் விடியலுக்காக மரணித்த மாவீரர்களின் வித்துடல்களை அடக்கம் செய்வதற்கான பெட்டிகளை வாங்கவும் இது போன்ற ஏனையவற்றுக்கும்தான் உங்களுடைய வரிப்பணம் பயன்படுத்தப்படுகின்றது.

இந்த மண்ணில் 60, 70 ரூபா விற்கவேண்டிய உருளைக்கிழங்கை 180 ரூபா முதல் 240 ரூபாவரை விற்பனை செய்து லாபம் ஈட்டினார்களே அத்தகைய பணம் யாருடைய சமூக பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்பட்டது. மக்களுக்கு அதனால் ஏதேனும் பயன் இருந்ததா? என்பதையும் நீங்கள் சிந்திக்கவேண்டும்.

இன்று எம்மண்ணில் ஏ-9 பாதை திறக்கப்பட்டதன்மூலம் பொருள்கள் எடுதது வரப்படுகின்றன. பொருள்களின் விலைகள் குறைவடைந்து வருகின்றன. வெகு விரைவில் பொருள்களின் விலைகள்மேலும் குறைவடைய நாங்கள் நடவடிக்கை மேற்கொள்ளுவோம்." - இவ்வாறு இளம்பரிதி தெரிவித்தார். (ஒ-86)

# அநுராதபுரத்தில் ரூ.10லட்சம் சம்பளப் பணம் கொள்ளை

கொழும்பு,ஜூன்5

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அநுராதபுரம் கிளை அலுவலகத்தின் ஊழியர் சம்பளப் பணம் 10 லட்சம் ரூபா நேற்றுக் கொள்ளையடிக்கப்பட்டது.கிளை அலுவலக அதிகாரிகள் இருவர் அநுராதபுரம் மக்கள் வங்கியில் இருந்து சம்பளப் பணம் 10 லட்சம் ரூபாவை எடுத்துக்கொண்டு காலை 10.45 மணியளவில் வெளியில் வந்தபோதே பணம் கொள்ளையடிக்கப்பட்டது.

ஒரு கொள்ளையர் துப்பாக்கி ஒன்றைக் காட்டி அதிகாரிகளைப் பயமுறுத்திவிட்டு பணப் பையைப் பறித்திருக்கிறார். மற்றொரு கொள்ளையர் மோட்டார் சைக்கிளில் வந்திருக்கிறார்.

இருவரும் பணத்துடன் தப்பியோடுகையில் பொலீஸார் பின்னால் விரட்டிச் சென்றனர். கொள்ளையர் கைக்குண்டு ஒன்றைப் பொலீஸாரை நோக்கி வீசிவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர். பொலீஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர். (ம)

# செவ்வாயில் மனித....

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஞானிகள் 'ஒடிஸி'யைப் பணித்தார்கள். அதன் முடிவு அவர்களுக்கு மிக உற்சாகம் தருவதாக இருந்தது. கண்டுபிடிக்கப்பட்டது நீர்தான் என்பதைத் தெளிவுபடுத்திய 'ஒடிஸி' அதில் ஐதரசனின் அளவு அதிகம் என்பதையும் உறுதிப்படுதியது.

செவ்வாயில் தண்ணீர் இருப்பது உறுதியானால் 'பாத்பைண்டர்' அங்கு தரையிறங்கி ஆய்வு செய்தபோது ஏன் அது அகப்படவில்லை என்ற கேள்வி எழுகிறதல்லவா?

'பாத்பைண்டர்' செவ்வாயில் நிலத்தின் மேற்பரப்பை மட்டுமே ஆராய்ந்தது. அவ்வாறே அது வடிவமைக்கப்பட்டிருந்தது. அதனால் நிலத்தின் கீழ் இருந்த தண்ணீரை அதனால் கண்டுபிடிக்க முடியாமல் போனது. அது தவிர செவ்வாயின் ஒரு சிறு பகுதியை மட்டுமே 'பாத்பைண்டர்' ஆராய்ந்தது.

ஆனால், ஒடிஸியோ நிலத்தை ஊடறுத்து ஆய்வு செய்யும் செயற்றிறன் வாய்ந்தது. அதனாலேயே ஒரு மீற்றர் ஆழத்தில் இருந்த படிப்படிமத்தை அதனால் கண்டுபிடிக்க முடிந்தது என்று நிலைமையை விளக்குகின்றனர் விஞ்ஞானிகள்.

இந்தக் கண்டுபிடிப்பு நாஸா விஞ்ஞானிகள் மத்தியில் புதிய உற்சாகத்தையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. செவ்வாயில் உயிரினங்கள் இருக்கிறதோ, இல்லையோ அங்கு மனிதர்கள் உயிர்வாழ அடிப்படைத் தேவையான நீர் இருக்கிறது. எனவே நிலவுக்குப் பின்னர் செவ்வாய்க்கு மனிதனை அனுப்பமுடியும் என்பதுதான் விஞ்ஞானிகளின் இந்த மகிழ்வுக்குக் காரணம்.

செவ்வாயில் மனிதக் குடியேற்றம் குறித்து இப்போதே அவர்கள் ஆராயத் தொடங்கிவிட்டார்கள். இன்னும் 20 ஆண்டுகளில் செவ்வாயில் மனிதன் தரையிறங்கிவிடுவான என்று நம்பிக்கையோடு கூறுகிறார் நாஸாவில் செவ்வாய் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள டாக்டர் ஜேம்ஸ் ஹார்வின். செவ்வாயில் நீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பது ஒரு மிகமிக முக்கிய கண்டுபிடிப்பாகும் என்று அவர் வர்ணிக்கின்றார்.

விஞ்ஞானிகள் இரசாயன புதைபடிமம்(Chemical Fossils) என்று அழைக்கும் பனிப்பாறை தொடர்பாக ஆராய்வதற்கென 2004ஆம் ஆண்டளவில் நகரும் ஆய்வுகூடத்துடன் (Mobile Laboratory) கூடிய விண்கலம் ஒன்றை அனுப்புவதற்கும் திட்டமிட்டு வருகின்றனர்.

செவ்வாயின் நிலப்பரப்பிலிருந்து 10அடி ஆழம்வரை சென்று ஆராயும் திறன் படைத்த கருவி ஒன்றை 2009 ஆம் ஆண்டளவில் செவ்வாயில் தரையிறக்குவதற்கும் நாஸா திட்டமிட்டுள்ளது. முதலில் செவ்வாயில் இருந்து ஆய்வுக்கான முக்கிய பொருள்களை பூமிக்கு எடுத்துவர வேண்டும் அப்போதே இந்த ஆய்வு குறித்து மிகச் சரியான முடிவுகளைப் பெறமுடியும். எனவே அதற்கான திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும் என்று கூறுகிறார் ஹார்வின்.

"இது தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய ஒரு விடயம். நாம் எமது தொழில்நுட்ப வசதிகளை மேலும்மேலும் விரிவாக்கி விஸ்தரிக்க வேண்டும். ஆனால் இவற்றையெல்லாம் நாம் எப்போது செய்து முடிப்போம் என்பதைத் தெளிவாகக் கூறமுடியாது" என்றும் அவர் கூறுகிறார்.

இவையனைத்தும் வெற்றிகரமாகச் சாத்தியமானால் அவற்றில் இருந்து பெறப்படும் ஆய்வு முடிவுகள் செவ்வாயில் மனிதன் தரையிறங்குவதைத் தீர்மானிக்கும்.

தற்போது விண்வெளிக்குச் சுற்றுலா சென்றுவருவதற்கான வசதிகளை ரஷ்யா செய்துள்ளது. இதுவரை இரு சுற்றுலாப் பயணிகள் விண்ணுக்குச் சென்று வெற்றிகரமாகத் திரும்பி வந்துள்ளனர். இதனையடுத்துச் சந்திரனுக்கு சுற்றுலாப் பயணிகளை அனுப்பும் திட்டம் குறித்து நாஸா தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது. விரைவிலேயே சந்திரனுக்கான சுற்றுலாப் பயணம் ஆரம்பமாகிவிடும் என்று தெரிகிறது.

இவற்றையெல்லாம் வெற்றிகரமாக நிறைவேற்றும் சமயத்தில் செவ்வாயில் மனிதன் காலடி வைப்பது எளிதாகும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

"செவ்வாய் சந்திரனைப் போன்றதல்ல. சந்திரனில் உயிர் வாழ்வு என்பது நினைத்துப் பார்க்க முடியாதது. ஆனால் செவ்வாயில் அது சாத்தியமாகலாம் என்றே நாம் இன்னும் கருதுகின்றோம்" - என்கிறார் ஹார்வின்.

செவ்வாயில் காலடி வைப்பது மட்டுமல்ல அங்கு உயிர் வாழ்க்கை நடத்த முடியுமா என்பதை ஆராய்வதும்தான் நாஸா ஆய்வின் அடிப்படை. அது வெற்றிபெற்றால் செவ்வாயில் மனிதக் குடியேற்றம் சாத்தியமாகும். அதற்கு மிகநீண்ட காலம் எடுக்கலாம். ஆனால் அறிவியல் வளர்ச்சியும் விஞ்ஞான ஆய்வுகளும் அதற்கு நிச்சயம் வழிசமைக்கும் என்று நம்பலாம்.

"நாம் நிச்சயமாகச் செவ்வாய்க்குப் போவோம். அது நிச்சயம் நடக்கும். பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான தூரத்தைப் போன்று 1,500 மடங்கு தொலைதூரத்தில் உள்ள செவ்வாயில் தரையிறங்கி என்னத்தைச் சாதிக்கப்போகிறோம் என்பது இங்கு மிகப்பெரிய கேள்விக் குறியே. என்றாலும் மனித வரலாற்றில் சந்திரனுக்கு அடுத்தபடியாக செவ்வாயில் மனிதன் தரையிறங்குவதைத் தடுகக முடியாது. அதற்காக நாம் செய்ய வேண்டியதெல்லாம் செவ்வாய் குறித்த தெளிவை முழுமையாகப் பெறுவதும் எமது தொழில்நுட்பத்தை மேலும் வளர்த்துக்கொள்ளவேண்டியதும் தான்" - என்கிறார் ஹார்வின்.

இன்னும் சில பத்தாண்டுகளில் மனிதர்கள் செவ்வாய்க்குச் சென்று வருவது அதிசயமாக இருக்காது. "உங்களுக்குச் செவ்வாய்க்குற்றமா? நீங்கள் செவ்வாயில் குடியேறிவிடுங்கள், எல்லா தோஷமும் நீங்கிவிடும் என்று எங்கள் சோதிடர்கள் சொல்லாமலிருந்தால் அதுதான் ஆச்சரியமானதாக இருக்கும். ☆

## முறைசாராக் கல்வி இறுதிப் பரீட்சை!

யாழ்.மத்திய கல்லூரியின் முறைசாராப் பிரிவில் கல்வி கற்று தகுதிகாண் பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கான இறுதிப் பரீட்சை யாழ் கல்வித்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் 16ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமான ரூபா 50ஐ யாழ். வலய கல்வித்திணைக்களத்தில் அல்லது கல்லூரியின் முறைசாராக் கல்விப்பிரிவில் செலுத்துமாறு கேட்கப்படுகின்றனர். (ஒ-13)

# யூரியா விலை குறைப்பு

யூரியா உரத்தின் விலை இன்று முதல் அந்தருக்கு 110 ரூபா குறைக்கப்படுகின்றது. என்று கமநல சேவைகள் திணைக்களப் பணிப் [illegible] தரேசன் தெரிவித்தார்.

சகல கமநல சேவை நிலையங்களிலும் இன்றுமுதல் புதிய விலைக்கு விவசாயிகள் யூரியாவைக் கொள்வனவு செய்யலாம் என்றும் தெரிவித்தார்.

இதுவரை காலமும் ஒரு அந்தர் யூரியா 630 ரூபாவுக்கு விற்பனையாகியது. இன்றுமுதல் அதன் விலை 520 ரூபாவாகும். (ம-3)

SUBRA (14)
சித்தன்கேணி.
Spoken with Grammar
By
BRITTO
ஆரம்பமாகிவிட்டது!
அனுமதிக்கு முந்துங்கள்!!
TU. - TH. - 7.00 - 8.00
சிங்களம்
லீலாகிருஷ்ணன்
TU. - TH. - 8.00 - 9.00
(C/22398)

கணக்கு எழுதுதல்
30 வருட அனுபவமுள்ள கணக்குப் பதிவாளரால் சகல விதமான கணக்குகளும் எழுதிக் கொடுக்கப்படும்.
தொடர்பு:
S. குமரன்,
106, புங்கன்குளம் றோட்,
கொழும்புத்துறை.
இந்திரன் ஹாட்வெயர்ஸ்,
243(101), K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.

SUBRA (14)
சித்தன்கேணி.
2003 A/L
பௌதிகவியல்
அலகு - புலங்கள்
ஆசிரியர்: ஜெயம்
ஆரம்பம்: இன்று (5-6-2002)
புதன் - 5.00
(C/22399)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
இலங்கை.
உடற்கல்வி டிப்ளோமா பரீட்சை
உடற்கல்வி டிப்ளோமா முதலாம், இரண்டாம் வருட பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் 15-06-2002ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.
மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்திற்கு ரூபா 50/- வீதம் பல்கலைக்கழகக் காசாளரிடமோ அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் இன்று (05-06-2002) புதன்கிழமையில் இருந்து உடற்கல்வி அலகில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை "இணைப்பாளர், உடற்கல்வி அலகு" அவர்களிடம் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.
- பதிவாளர். (C/22397)

# வாக்குறுதிகளில் இருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெளிவுபடுத்தியிருக்கிறார்.

அப்பேட்டியின் முழு விவரம் வருமாறு:-

★ *கேள்வி:-* ஸ்ரீலங்காவில் தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து உங்களது கணிப்பீடு என்ன? ஜூன் மாதம் தாய்லாந்தில் நடைபெறவிருந்த பேச்சுக்கள் தாமதமாகிவருவதன் காரணமென்ன?

● *பாலசிங்கம்:-* தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் மத்தியில் கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்பாடு, பெரிய அளவிலான யுத்த நிறுத்த மீறுதல் சம்பவம் எதுவுமின்றி, நான்கு மாதங்களாக தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவதுதான் ஒரு நல்ல விடயம்.

ஆயுத மோதல்களுக்கு ஒரு முடிவு கட்டி, சமாதானப் பேச்சுக்களை தொடர்வதற்கு ஏதுவான ஒரு நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்குவதுதான் இப்போர்நிறுத்த உடன்பாட்டின் பிரதான நோக்கம். போரினால் சிதைந்து போயிருக்கும் தமிழர் தாயகத்தில் போர் நெருக்கடியை முழுமையாகத் தணித்து இயல்புநிலையைத் தோற்றுவிப்பதே இந்த உடன்பாட்டு விதிகளதும் நல்லெண்ண நடவடிக்கைகளதும் குறிக்கோளாகும். மிகவும் இறுக்கமான இராணுவ ஆட்சியின் கீழ், தமிழ்மக்கள் மீது திணிக்கப்பட்ட அடக்குமுறைத் தடைகளை நீக்கி, அவர்களது வாழ்க்கையை மேம்பாடு செய்வதும் இந்த உடன்பாட்டின் நோக்கம்.

தமிழர் தாயகத்தில் இயல்புநிலையை உருவாக்கும் நோக்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட சில ஒப்பந்த விதிகளும் நல்லெண்ண நடவடிக்கைகளும் முழுமையாக நிறைவு செய்யப்படவில்லை. ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஒருசாரார் என்ற ரீதியில், இது குறித்து நாம் மிகவும் ஏமாற்றமும் கவலையும் அடைந்துள்ளோம்.

போர்நிறுத்த உடன்பாட்டில் விதிக்கப்பட்ட கால அட்டவணையை மீறி, சிங்கள ஆயுதப் படையினர் தொடர்ந்தும் கோயில்கள், பாடசாலைகள், கல்லூரிகள், பொதுக் கட்டடங்கள் போன்றவற்றில் குடியிருந்து வருகின்றனர். இந்த இந்துக் கோயில்கள் சில, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருப்பணித்தலங்கள். இவை எமது மக்களுக்குப் புனிதமானவை. இதனால் அவர்கள் ஆத்திரமடைந்துள்ளனர். சமாதான முயற்சியில் எமது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும், இதனால் இழந்து வருகிறது.

போர்நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு முரணான வகையில், சன நெருக்கடி நிறைந்த தமிழரின் நகரங்கள், பட்டினங்களிலுள்ள சோதனைச் சாவடிகளையும் தடைகளையும் அகற்றுவதற்கு சிங்கள ஆயுதப் படையினர் மறுத்துவருகின்றனர். அத்துடன் பொதுமக்களை மிரட்டியும் துன்புறுத்தியும் வருகின்றனர். கிழக்கு மாகாணத்தில நிலைமை மோசமாகிவருகிறது. அங்கு எமது போராளிகளுக்கும் பொதுமக்களுக்கும் எதிராக ஆயுதப் படையினர் வன்முறையைப் பிரயோகித்த சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

### தீவுப்பகுதி நிலைமை

வடக்கு - கிழக்கில், அரசியல் பணி புரிவதற்காக ஆயுதம் தரியாத எமது போராளிகளுக்கு நடமாடும் சுதந்திரம் உண்டென போர்நிறுத்த உடன்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் முப்பத்தையாயிரம் தமிழ்மக்கள் வசிக்கும் தீவகப் பகுதிகுள் எமது போராளிகள் சுதந்திரமாக நடமாட முடியாத வகையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் கடும் நிபந்தனைகளை விதித்திருக்கிறது. போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகி 90 நாள்கள் கால வரையறை கடந்தபோதும், எமது மீனவர்கள் சுதந்திரமாக தொழிலாற்ற முடியாதவாறு கடற்படையினர் தொடர்ந்தும் தடைகளை கடைப்பிடித்து வருகின்றனர். இதனால் எமது மீனவ சமூகத்தினின் வாழ்க்கை நிலை மோசமாகி வருகின்றது. சுருக்கமாகச் சொல்வதானால் போர்நிறுத்த உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்த சிங்கள ஆயுதப் படையினர் ஒத்துழைக்கவில்லை. அத்துடன் அவர்கள் விடுதலைப் புலிகளுடனும் பொதுமக்களுடனும் பகைமை உணர்வுடன் நடந்து கொள்கின்றனர்.

போர்நிறுத்த உடன்பாட்டின் விதிமுறைகள் ஒழுங்கான முறையில் செயற்படுத்தப்படாத காரணத்தினால், பேச்சை ஆரம்பிப்பதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. தமிழர் தாயகத்தில் யுத்த நெருக்கடி படிப்படியாக தணிக்கப்பட்டு இயல்புநிலை உருவாக்கப்படவேண்டும். இது சமாதான பேச்சுக்களை நடத்துவதற்கு அத்தியாவசியமானது. போர்நிறுத்த உடன்பாட்டு விதிகளை செம்மையாக நடைமுறைப்படுத்தினால்தான் இது சாத்தியமாகும்.

எம்மைப் பொறுத்தவரை போர்நிறுத்தம் வலுப்படுத்தப்படுவது முக்கியமானது. ஏனென்றால், ஒரு பலமான சமாதானத்தின் அடித்தளத்திலிருந்துதான் அரசியல் பேச்சுக்கள் நடைபெறவேண்டும். சமாதானத்தைப் பலப்படுத்தி போர் நெருக்கடியை படிபடியாக தணிப்பதில் அரசு அக்கறை காட்டுவது போலத் தெரியவில்லை. இதனால் நாம் ஏமாற்றம் அடைந்துள்ளோம். எமது மக்கள் சமாதானப் பாதையில் வைத்துள்ள நம்பிக்கையும் இதனால் தகர்ந்து வருகின்றது.

★ *கேள்வி:* ஸ்ரீலங்கா ஆயுதப் படைகளின் பிரதம தளபதி என்ற பொறுப்பை வகிக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, போர்நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திடவில்லை என்ற காரணத்தினாலேயே, ஆயுதப்படையின் போர்நிறுத்த விதிகளை செயற்படுத்த-மறுத்து வருவதாக அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. இதுபற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

● *பாலசிங்கம்:* இதில் ஓரளவு உண்மையிருக்கலாம். போர் நெருக்கடியை தணித்து இயல்புநிலையைத தோற்றுவிக்கும் நோக்கத்தோடு செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்த விதிகளையும், நல்லெண்ண நடவடிக்கைகளையும் ஜனாதிபதி குமாரதுங்க கடுமையாக எதிர்க்கிறார் என்பது எமக்குத் தெரிந்தவிடயம்.

தமிழ்மக்களை இராணுவ ரீதியாக அடக்கி ஒடுக்க வேண்டும் என்ற நோககில், 7 ஆண்டு காலத்துக்கு மேலாக ஈவிரக்கமற்ற கடும்போக்கை அவர் கடைப்பிடித்தார். தமிழர் மீதான பொருளாதாரத் தடைகளை இறுக்கி, போரை விரிவாக்கம் செய்து தீவிரப் படுத்தியதும் அவரே. விடுதலைப் புலிகள் இயக்கத்தை அவர் ஆழமாக வெறுக்கிறார். விடுதலைப் புலிகளுடன் ஓர் அரசியல் இணக்கப்பாடு செய்துகொள்ளப்படுவதையும் அவர் விரும்பவில்லை. தமிழரின் விடுதலைப் போராட்டம் குறித்து அவர் கொண்டுள்ள கடும்போக்கை பார்க்கும்போது, தற்போதைய சமாதான முயற்சியில் குறுக்கிட்டு, அதற்கு அவர் பங்கம் விளைவிக்கக் கூடும். ஆயினும், எம்மை பொறுத்தவரை இது ரணிலுக்கும் சந்திரிகாவுக்கும் மத்தியிலான அதிகார உறவுப் பிரச்சினை. இவர்கள் இருவருக்கும் மத்தியில் ஆக்கபூர்வமான அரசியல் உறவு ஏற்பட்டு, சமாதான வழிமுறைக்கு அத்திவாரமாக விளங்கும் போர்நிறுத்த உடன்பாடு செம்மையாக செயற்படுத்தப்படுமானால் நாம் மகிழ்ச்சியடைவோம்.

★ *கேள்வி:-* ஜனாதிபதி சந்திரிகா போர்நிறுத்த உடன்பாட்டை கடுமையாக எதிர்த்த போதும், ஆரம்ப கட்டங்களில் பெரிதாக எந்தக் குறுக்கீடும் செய்யவில்லை. ஆனால் இப்போது போர்நிறுத்த விவகாரத்தில் தன்முனைப்போடு தலையீடுகளைச் செய்து வருகிறார். பேச்சுக்களுக்கு திகதி குறிப்பது, புலிகள் மீதான தடையை நீக்குவது, இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குவது போன்ற விடயங்களில் விடுதலைப் புலிகள் மீது புதிய நிபந்தனைகளை விதிப்பதில் ரணிலுக்கும் சந்திரிகாவுக்கும் மத்தியில் நல்லிணக்கம் ஏற்பட்டு வருவது போலத் தெரிகிறது. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

● *பாலசிங்கம்:-* வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை அமைப்பது, புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்குவது போன்ற முக்கிய விடயங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கொடுத்த வாக்குறுதிகளிலிருந்து பின்வாங்குவது எமக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கின்றது. இந்த மனமாற்றத்துக்கு சந்திரிகா அம்மையார் காரணமாக இருக்கலாம். விடுதலைப் புலிகள் மீது கடும்போக்கை கடைப்பிடிக்குமாறு பிரதமர் ரணில் மீது தனது செல்வாக்கை பிரயோகித்து இருக்கலாம். தமிழருக்கு எதிராக கொடிய போரை முன்னெடுத்த போதும் இக்கடும்போக்கையே அவர் கடைப்பிடித்தார். சந்திரிகா அம்மையாரின் தலையீடும், ஏற்றுக்கொள்ளமுடியாத நிபந்தனைகளை திணிக்கும் அவரது தவறான அணுகுமுறைகளும் சமாதான முயற்சியின் முன்னேற்றத்தை தடுத்து ஒரு மந்த நிலையை தோற்ற வைத்துள்ளது.

### தடையை நீக்க பின்னடிப்பு

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னதாக போர்நெருக்கடியை தணித்து, அமைதி நிலையை உருவாக்கி, தமிழர் தாயகத்தில் பரிபூரண இயல்புநிலையை தோற்றுவிக்கவேண்டும் என்பதும், அதனைத் தொடர்ந்து விடுதலை புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கவேண்டும் என்பதும், எமது இயக்கம் பல ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வரும் நிலைப்பாடாகும். எந்தவித நிபந்தனைகளும் இன்றி விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கப்படவேண்டும் என்பதே தமிழ்மக்கள் அனைவரினதும் ஏகோபித்த அபிலாஷையாகும். ஈழத் தமிழினத்தின் உண்மையான, சட்டரீதியான பிரதிநிதிகள் என்ற அங்கீகாரத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சில் பங்குகொள்ளவேண்டும் என்பதே எமது மக்களின் விருப்பம்.

சமாதானத்தை முன்னெடுப்பதற்காகவும் தமிழ்மக்களின் ஏகோபித்த அபிலாஷையை நிறைவு செய்து வைப்பதற்காகவும், எமது விடுதலை இயக்கம் மீதான தடையை நீக்கும் முடிவை ரணில் விக்கிரமசிங்க துணிந்து எடுப்பார் என நாம் எதிர்பார்த்தோம். ஆனால், பேச்சுக்கான திகதியை நிர்ணயித்ததன் பின்னர்தான் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்குவது குறித்து பரிசீலனை செய்யப் போவதாக அரசு ஒரு நிபந்தனையை விதித்திருப்பது எமக்கு ஏமாற்றத்தை தருகிறது. இது மட்டுமன்றி, பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்ட பின்னர் தான் தடைநீக்கம் பற்றி சிந்திக்க வேண்டும் எனவும் அரச வட்டாரங்களில் பேசப்படுகின்றது. ஜனாதிபதி குமாரதுங்கவினதும், கதிர்காமரதும் அழுத்தம் காரணமாக ரணில் விக்கிரமசிங்கவின் அரசு தனது முந்திய நிலைபாட்டிலிருந்து பின்வாங்கியுள்ளது என்றுதான் கருதவேண்டியிருக்கிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் பங்குகொள்ள வழியமைக்கும் இடைக்கால நிர்வாகத் திட்டத்திலிருந்து ரணிலின் அரசு தனது முந்திய நிலைப்பாட்டை மாற்றியிருக்கிறது. முதலில், இனப்பிரச்சினையின் அடிப்படைகள் பற்றிப் பேசி, அதற்குத் தீர்வு கண்டதன் பின்புதான் இடைக்கால நிர்வாகம் பற்றி பரிசீலனை செய்யவேண்டும் என்ற சந்திரிகா அம்மையாரின் நிலைப்பாட்டை விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்டுள்ளார் போலத் தெரிகின்றது.

### இடைக்கால நிர்வாகத் திட்டத்தை முதலில் முன்வைத்தது இந்தியா

இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு அரசமைப்பு வடிவம் கொடுத்து செயற்படுத்துவதற்கு முன்பாக, வடக்கு - கிழக்கு நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கும் நோக்கத்துடன் முதலில் இந்திய அரசுதான் இடைக்கால நிர்வாகத் திட்டத்தை முன்வைத்தது. ஆயினும், அப்பொழுது

(12ஆம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை இராசரெத்தினம்
### (புலவர்)

(இளைப்பாறிய இ.போ.ச.நடத்துநர்,
மண்டைதீவு - அல்லைப்பிட்டி)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசரெத்தினம் அவர்கள் நேற்று (04.06.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கச்சிப்பிள்ளை தம்பதிகளின் ஏக புத்திரனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவயோகம், காலஞ்சென்ற சிவபாதம் ஆகியோரின் அன்புத் தந்தையும், கைலாசபிள்ளை (நவம் - கமல் செரமிக்ஸ், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமனாரும், தயாளினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கார்த்திகா (திருக்குடும்ப கன்னியர்மட பெண்கள் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெகசோதி, சந்தானலெட்சுமி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான திலகவதி, சிவபாக்கியம், பஞ்சாட்சரம் மற்றும் செல்வரெட்ணம் (கிராம அபிவிருத்தி மாவட்ட உத்தியோகத்தர், யாழ். செயலகம்), விஜயரெத்தினம், விநாயகமூர்த்தி (முகாமையாளர், வேலணை ப.நோ.கூ.சங்கம்), கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் வசந்தரூபன் (பரீட்சைக் கிளை, யாழ்.ப.க.கழகம்), காந்தரூபன் (கமல் செரமிக்ஸ், மல்லாவி), ஸ்ரீசெல்வராணி (சரோஜா - வவுனியா) ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2002) புதன்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.கைலாசபிள்ளை (நவம்)
(மருகர்)

*372, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (4510)

### கணபதிப்பிள்ளை பஞ்சலிங்கம்

(ஓய்வுபெற்ற கணக்காளர், Alpha Industries - கொழும்பு)

உடுவில் லவ் லேணைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பஞ்சலிங்கம் 01.06.2002 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், சிவப்பிரகாசம் - காலஞ்சென்ற கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், கேதாரகௌரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற புத்திரலிங்கம், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரமணன் (கனடா), அகிலா (கனடா), உத்தமி (Union International Accessories, கொழும்பு), குந்தவி (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ருபிச்சந்திரனின் (கனடா) மாமனாரும், அசோகனின் (G.T.Z.) மைத்துனரும் திருமதி தி.சுகிர்தரத்தினம் (கனடா), குமாரதாசன் ஆகியோரின் மருமகனும், காயத்ரி (பிரதேச சபை, சுன்னாகம்), தாட்சாயணி, மாதினி, கோகுலன் ஆகியோரின் மாமாவும் வாகீசனின் (கனடா) பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2002) புதன்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ருபிச்சந்திரன் (மருமகன்)
க.அசோகன் (மைத்துனர்)

*லவ் லேன்,*
*உடுவில்* (C/22403)

### வேலுப்பிள்ளை சந்திரலிங்கம்
### (குட்டியர்)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டி தெற்கை வசிப்பிடமாகவும் தற்போது உரும்பிராய் தெற்கில் வசித்தவருமாகிய வேலுப்பிள்ளை சந்திரலிங்கம் அவர்கள் நேற்று (04.06.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் நாகலிங்கம் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்வநாயகியின் அருமைக் கணவரும் காலஞ்சென்ற சரோஜினி மற்றும் சந்திரகாந்தன் (சுவிஸ்), ரஜனி, ரோகினி, ரஞ்சினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயகுமார், ரஞ்சனராஜா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், பார்த்திபன் மாதங்கி, பரந்தாமன், ராகவன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் சின்னம்மா, செல்வக்காந்தமலர், இரத்தினசிகாமணி, அழகேஸ்வரன், கணேஸ்வரன், மனோரஞ்சிதமலர் (இந்தியா), புஸ்பலீலாவதி (இந்தியா), மஞ்சுளாதேவி, இந்திராதேவி (U.S.A) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.06.2002) செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.லோகநாதன் (மைத்துனர்)
(ஆசிரிய அலோசகர், தீவக கல்வி வலயம்)

*V.T.S.வீதி,* (4519)
*உரும்பிராய் தெற்கு.*

## கண்ணீர்ப் பூக்கள்

மண்ணில் 26.09.1944 — விண்ணில் 01.06.2002

எமது சக மாணவியின் அன்புத் தந்தையாரான
**கணபதிப்பிள்ளை பஞ்சலிங்கம்**
அவர்கள் காலமானதையிட்டு நாம் மிகவும் துயரடைகின்றோம்.

**பாசமுடன் பழகிய நண்பியே!**
**நீ இன்று**
**உன் குலவிளக்கு அணைந்ததென்று**
**கதறுகிறாய் எம் கண்ணெதிரே!**
**கண்ணீரைத் துடைத்திடவா; இல்லை**
**கதறிடவா என ஏங்குகின்றோம் நாம் இங்கே!**

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- 2002 A/L
மாணவிகள்.

(4515)

நாகம்ஸ் சுன்னாகம்
இளைய தளபதி விஜய்,
உலக அழக பிரியங்கா சோப்ரா,
விவேக்
நடித்த
தமிழன்
(ரீஸ்ஸ்)
காட்சிகள்: 11.00,3.00 (புதிய நேரம்)
(4503)

நிரஞ்சனாஸ்
சங்கானை
சுப்பர்ஸ்ரார் ரஜனி, நக்மா,
ரகுவரன் மற்றும் பலர் நடிக்க
பாட்ஷா
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C-22357)

ராஜா யாழ்ப்பாணம்
ரஜனி, மீனா,
கவுண்டமணி, செந்தில் நடித்த
எஜமான்
தினசரி: 10.30, 2.30, 5.30
7முதல கள்ளழகர்
(C/22356)

# வாக்குறுதிகளில்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஆட்சிபீடத்திலிருந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் இழுத்தடிப்புகள் காரணமாக அத்திட்டம் செயற்படுத்தப்படவில்லை. விடுதலைப் புலிகள் பங்குபற்றக்கூடியதாக வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாக கட்டமைப்பை உருவாக்குவேன் என்று விக்கிரமசிங்கா கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது பகிரங்கமாகவே பரப்புரை செய்து மக்களிடமிருந்து ஆணை பெற்றார். ஆயினும் இப்பொழுது தனது நிலைப்பாட்டை மாற்றியுள்ளார். இனப்பிரச்சினையின் அடிப்படைகள் பற்றி பேசி நிரந்தரத் தீர்வுகாண வேண்டும் என்கிறார்.

இனப்பிரச்சினையின் அடிப்படைகள் பற்றி பேசி நிரந்தரத் தீர்வு காண்பது என்பது இலகுவான காரியமல்ல. அரசமைப்பு முறையை அடிப்படையாக மாற்றியமைக்கும் வகையில் யாப்பில் சீர்திருத்தங்கள் கொண்டு வரும் தேவை ஏற்படும். இது காலத்தை விழுங்கும் ஒரு சிக்கலான விவகாரம். இது நடைமுறைக்கு சாத்தியமான காரியமும் அல்ல. ஏனென்றால் இனவாத சித்தாந்தத்தில் மூழ்கிப் போயிருக்கும் பௌத்த பீடங்களும் மற்றும தீவிர தேசியவாத சக்திகளும் தமிழ் மக்களுக்கு அரச அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதை கடுமையாக எதிர்க்கவே செய்வார்கள். அதுமட்டுமன்றி, சகல அதிகாரங்களும் படைத்த ஒரு ஜனாதிபதியின் ஆட்சிமுறையின கீழ் குறைந்த அதிகாரங்களுடன் செயற்படும் விக்கிரமசிங்கவின் அரசு, அரச கட்டமைப்பையே அடிப்படையாக மாற்றியமைகரும் ஓர் இமாலய சாதனையைப் புரிவது முடியாத காரியம். இதன் காரணமாகவே நாம் நடைமுறைச் சாத்தியமான ஒரு திட்டத்தை முன்வைத்தோம். முதலில், நிலையான ஒரு போர்நிறுத்தம் செய்து யுத்த நெருக்கடியை தணித்து, இயல்பு நிலையை தோற்றுவித்து வடக்கு-கிழக்கில் ஓர் இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குவது என்பதுதான் இத்திட்டம். போரினால் சிதைந்திருக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும முரண்பட்டு நிற்கும் இரு இனங்கள் மத்தியில் நல்லுறவை வளர்க்கவும் இந்த இடைக்கால நிர்வாகம், கால இடைவெளியை வகுத்துக் கொடுக்கும். இத்திட்டத்திலுள்ள நடைமுறைச சாத்தியத்தையும் , நியாயப்பாட்டையும் புரிந்துகொண்ட விக்கிரமசிங்கவின் ஆட்சிபீடம் முதலில் இதனை ஏற்றுக்கொண்டது. ஆனால் இப்பொழுது ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசனைக்கு அமைய விக்கிரமசிங்க தனது நிலைப்பாட்டை மாற்றியுள்ளார். தமிழரின் தேசிய பிரச்சினையை ஆராய்ந்து, அவற்றுக்கு நிரந்தர தீர்வு காண்பது என்பது மிகவும் சிக்கலான காரியம். இந்நிலைப்பாடு விக்கிரமசிங்கவின் அரசுக்கு நெருக்கடியைத்தான் கொடுக்கும்.

**அடிப்படைகளை ஏற்காமல் பேசுவது அபத்தமானது**

சுயநிர்ணய உரிமை பற்றி எமது இயக்கத்தின் நிலைப்பாட்டை நாம் ஏற்கனவே விளக்கியிருக்கிறோம். தமிழினத்துக்கு சுயநிர்ணய உரிமையுண்டு. சுயநிர்ணய உரிமையின் உள்ளீடு, வெளியீடு என்ற இரு அம்சங்களுக்கும் தமிழ்மக்கள் உரித்தானவர்கள். உள்ளீடான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், தமிழர் தாயகத்தில் பூரணமான சுயாட்சியுடைய ஆட்சியமைப்பை பரிசீலனை செய்ய தமிழ்மக்கள் தயாராக இருக்கிறார்கள். இவ்விதமான உள்ளீட்டு சுயநிர்ணய உரிமையை தமிழர்களுக்கு வழங்க சிங்கள தேசம் மறுத்து, ஒடுக்குமுறையைத் தொடருமானால் நாம் பிரிந்து சென்று அரசியல் சுதந்திரத்திற்காகவும் தனியரசு நிர்மாணத்துக்காகவும் போராடத் தயாராக இருக்கிறோம்.

தமிழரின் தேசியப் பிரச்சினையின் அடிப்படைகளை எதிர்கொண்டு தீர்த்துவைக்கும் அரசியல் அதிகாரம ரணில் விக்கிரமசிங்கவுக்கு இல்லை என்பதே எமது கருத்து. ஒரு தேசம், ஒரு நாடு, ஒரு மக்கள் என்ற அவரது அரசியல் தத்துவமானது தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை போன்ற அடிப்படைக் கோரிக்கைகளுக்கு முற்றிலும் எதிர்மறையானது. வடக்கு - கிழக்கை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பும் பணியில் விடுதலை புலிகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் ஓர் இடைக்கால நிர்வாக அமைப்பை உருவாக்குவதே விக்கிரமசிங்கவுக்கு நடைமுறைச்சாத்தியமான விடயம். தமிழர் இனப்பிரச்சினையின் அடிப்படைகளை ஏற்றுக் கொளளாமல் அவை பற்றி பேச்சுக்களை நடத்துவது என்பது அபத்தமானது. அப்படி முயற்சித்தால் திம்புவில் நிகழ்ந்தது போலவே பேச்சு முறிவடைவது தவிர்க்க முடியாது.

**நிபந்தனை விதிக்கவில்லை**

★ *கேள்வி:* சமாதான முயற்சிக்கு மீண்டும் புத்துயிரூட்டி, அரசியல் பேச்சுக்களை உடன் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்?

● *பாலசிங்கம்:-* முதலாவதாக போர்நிறுத்த உடன்பாட்டில் விதிக்கப்பட்டது போல புனித வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள், கல்லூரிகள், பொதுக்கட்டடங்களிலிருந்து வெளியேறுமாறு படையினரை அரசு பணிக்க வேண்டும். இரண்டாவதாக, பொதுமக்கள் செறிந்து வாழும் நகரங்கள், பட்டினங்களில் அமைந்திருக்கும் தடைகளையும் காவற் சாவடிகளையும் அகற்றி விடுமாறு ஆயுதப் படையினரை அரசு பணிக்க வேண்டும். மூன்றாவதாக, தமிழீழ கடற்பரப்பில் எமது மீனவ மக்கள் சுதந்திரமாக தொழிலாற்றும் வகையில் சகல தடைகளும் நீக்கப்படவேண்டும். நான்காவதாக எவ்வித நிபந்தனைகளும் இன்றி எமது விடுதலை இயக்க மீதான தடை நீக்கப்படவேண்டும். ஐந்தாவதாக, ரணிலின் அரசு வாக்குறுதி அளித்தது போல இடைக்கால நிர்வாக அமைப்பை உருவாக்குவது பற்றியே பேச்சுக்கள் நடைபெற வேண்டும்.

நாங்கள் எவ்விதமான நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. போர்நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள விதிமுறைகளை காலதாமதமின்றி செயற்படுத்தும் படியே கேட்கிறோம். அத்தோடு இடைக்கால நிர்வாக கட்டமைப்பை உருவாக்கப்போவதாக விக்கிரமசிங்க அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு கேட்கிறோம். ஒட்டுமொத்தத்தில், இந்தசமாதான முயற்சியின் எதிர்காலம் ஸ்ரீலங்கா அரசின் கையில்தான்தங்கியிருக்கிறது.(ஐ-3)


## தேவை

**எழுதுவினைஞர் ஒருவர் தேவை**

நேரில் வரவும் 06.06.02
பி.ப. 4-6 மணி வரை

**திகழ் கல்வி நிறுவனம்**
இணுவில்.

சாயி கல்வி வட்டத்தின் தரம் 5 புலமைப்பரிசில் வினாத்தாள்களை பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.
(C/22400)



VICKKNAA INSTITUTE

பிரிவு 11

**A/L 2004**
கணக்கீடு

திரு.பாலவாசன்
(B.B.A. (FM. Spl.)

O/Lஇல் கணக்கீடு அறிவினைப் பெற்றிராத மாணவர்களுக்கான புதிய பிரிவு

Sat., Sun.→9-10 a.m.
ஆரம்பம்:
08.06.02 Sat.→ 9 a.m.
(4480)


### மின்சாரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படுகாயமடைந்தனர் என்பது தெரிந்ததே.

ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வந்தவேளை பிள்ளைகள் மூவரும் அடுத்தடுத்து உயிரிழந்தனர். நேற்று நான்காவது நபரான தாயாரும் உயிரிழந்து விட்டார். (ஐ-6)


**O-REX பல் கட்டுமிடம்**
பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி.

1) ஜப்பான் சங்குப் பல் கொண்டு பல் கட்டுதல்
2) மிதப்புப் பற்களுக்குக் கிளிப் போடுதல் (நவீன இலகு நுட்ப முறை)
3) உடைந்த பற்களை ஒட்டுதல் ஆகிய சேவைகள்.

பல் கட்டுதலில் தலைமுறை தலைமுறையாக வந்த நீண்டகால அனுபவம்மிக்க டாக்டரினால் மேற்கொள்ளப்படுகின்றன. (4502)


### தாய்லாந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்குவது மற்றும் இருநாடுகளுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் முன்னேற்றம் பற்றியும் பேச்சுக்கள் நடத்தப்படும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. ஆட்சி பீடமேறிய ஆறு மாதங்களில் பிரதமர் ரணில் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் இரண்டாவது விஜயம் இதுவாகும். (ஐ-6)

### புரிந்துணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாதுகாப்பு அமைச்சரிடம் பிரஸ்தாபித்தார்.

அதற்குப் பதில் அளிக்கையிலேயே அமைச்சர் மாரப்பன இப்படி உறுதி அளித்துள்ளார்.

"அரசு மீது தமிழ்மக்களோ, விடுதலைப் புலிகளோ சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. விடுதலைப் புலிகள் நீட்டியுள்ள நேசக்கரத்தை இறுகப்பற்றி சமாதான சூழ்நிலையை நிலைபெறச்செய்ய எல்லா வழிகளிலும் முயற்சி எடுப்போம்" என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3)

### நீர்கொழும்பிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமயம் இந்த இளைஞனும் அவரது சகாக்களும் சேர்ந்து கணவனை அந்த இடத்தில் வைத்தே தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பெணணின் கணவர் விடுதலைப் புலிகளின் யாழ்.அலுவலகத்துக்குச் சென்று முறைப்பாடு செய்துவிட்டு திரும்பி வந்தபோது அந்த இளைஞர் குழு மீண்டும அவரைத் தாக்க முற்பட்டபோது கைகலப்பு ஏற்பட்டது. நியாயம் கேட்க முற்பட்ட இளைஞர் ஒருவர் உடைந்த போத்தலால் குத்திக் காயப்படுத்தப் பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பெண்ணின் கணவரான எஸ்.அசோக் (வயது 32, நீர்கொழும்பு) என்பவரும் எஸ்.பென்சன் (வயது 27, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்) என்ற இளைஞனும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பெண்ணோடு சேஷ்டை புரிந்தவர்கள் என்று கூறப்படும் இளைஞர் குழு தம்மைத்தாமே 'தீனா குறூப்' என்று கூறிக்கொண்டு முன்னரும் பல தடவைகள் நகரப் பகுதியில் அடாவடித்தனங்களில் ஈடுபட்டிருப்பதாக நகரவாசிகள் தெரிவித்தனர். (ஐ-6)

### போக்குவரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதிர்நோக்கும் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியபோதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்சமயம் நடைமுறையில் உள்ள நேரத்தை அதிகரிப்பதில் எமக்கு ஆட்சேபமோ, பிரச்சினையோ எதுவும் இல்லை. பயண நேரத்தை அதிகரிப்பது தொடர்பான இணக்கப்பாடு அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய தரப்புக்களில் இருந்து வரவேண்டும். இரு தரப்புகளும் இணங்கும் பட்சத்தில் எமது சேவையை நாம் விஸ்தரிக்க முடியும்.

போக்குவரத்து நேரத்தை அதிகரிப்பது தொடர்பாக அரசுத் தரப்பு எம்மிடம் கோரிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது. இது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடி வருகின்றோம்.

விரைவில் இணக்கப்பாடு ஏற்படலாம் என நம்புகின்றோம் - என்றார்.

தினமும் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை மக்கள் போக்குவரத்துச் செய்யவும் -

பொருள் ஏற்றிவரும் வாகனங்கள் 24 மணி நேரமும் போக்குவரத்துச் செய்யவும் அனுமதிக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோரி வருவது தெரிந்ததே. (ஐ-3)


**NIRU TUITION CENTRE**
KONDAVIL
**A/L 2003 DAY CLASS**
கணித, விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பம்

| | |
|---|---|
| இணைந்த கணிதம் | : A.பத்மநாதன் |
| இரசாயனவியல் | : N.மகேஸ்வரன் |
| பௌதிகவியல் | : S.சோதிலிங்கம் |
| உயிரியல | : S.தற்பரன் |

ஆரம்பம்:
06.06.02 வியாழன் 10 a.m. (4514)


## பிரதமருடன் கூட்டமைப்பு சந்திப்பு

கொழும்பு,ஜூன்5

புரிந்துணர்வு உடன்பாட்டின் அமுலாக்கம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தமிழ் கட்சிக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று முற்பகல் 11.30 மணிக்கு சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றனர். (ஐ-3

## சீனத் தூதுக்குழு இன்று வருகிறது

யாழ்ப்பாணம்,ஜூன்5

வடக்கில் ஆழ்கடல் மீன்பிடிப்பு, விடுதி அமைத்தல் ஆகியன தொடர்பாக நேரில் ஆராய 12பேர் அடங்கிய சீனத் தூதுக்குழு இன்று யாழ்ப்பாணம வருகின்றது.

இரு தினங்கள் இங்கு தங்கியிருக்கும் குழுவினர் பல இடங்களுக்கு செல்லவிருக்கின்றனர். (ஐ-3)

# மின் உற்பத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மைகளின் ஆசீர்வாதமும் அங்கீகாரமும் கிடைத்துள்ளன. அதற்காக சில ஒப்பந்த வேலைகளும் அவர்களுக்கு சன்மானமாக வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிகிறது.

அமைச்சுப் பதவிகளுக்காக மலையக மக்களின் இருப்பிடங்கள் விலை போவதை தன்மானத் தமிழன் எவனும் ஏற்றுக்கொள்ளமாட்டான. எனவே, பின்விளைவுகளை கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும்" என இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி எதிர்பார்க்கின்றது.

தமிழீழ தேசிய தலைவராகிய தாங்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் இந்த விஷயத்தில் தலையிட்டு மலையகத் தமிழ் மக்களுக்கு ஏற்படவிருக்கும் அபாயத்தை தவிர்க்க உதவவேண்டும்.

இப்படி கணபதி கனகராஜ் தனது கடிதத்தில் கேட்டுள்ளார். (ஐ)


**நியாயமான விலையில் நவீன கணனிகள்**



**Pentium 4 (1.6/1.7 GHz)**
PentiumIII 733, 866,933, 1000 MHz,Celeron 1.2 Ghz

PRINTERS : EPSON LQ 300+ . EPSON LX 300+ HP 1200 LASER . HP 650C.
SCANNER : HP 3400. ACER UPS : APC 500/300VA

தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையில், உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம் IIS

IIS விற்பனைப் பிரிவு,
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
TP. No : 2831



## பல்கலைக்கழக அனுமதி 2002/2003

**பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருக்கும் மாணவர்களே!**

நீங்கள் எந்தப் பல்கலைக்கழகத்தில் எந்தப் பாட நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள் என்பதை அறிய ஆவலுடன் இருக்கின்றீர்களா?

அப்படியானால் உங்கள் பரீட்சை சுட்டெண்ணுடன் எமது தொலைத் தொடர்பு நிலையங்களுக்கு வாருங்கள். இன்று காலையில் இருந்து முடிவுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம்.
(C/22402)

| டிலெக்ஸ் கொமினிகேசன் | சௌபாக்கியா கொமினிகேசன் |
|---|---|
| இல. 24, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். | திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி. |
| தொ.பே.இல. 021-3568,021-3569 | தொ.பே.இல. 021-2669 |


## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் சங்கரலிங்கம்

(இ.போ.ச. சாரதி)

51,ராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சங்கரலிங்கம் நேற்று (04.06.2002) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2002) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சங்கரலிங்கம் புவனேஸ்வரி
(மனைவி)

*51, ராஜேஸ்வரி வீதி,*
*நாயன்மார்கட்டு.* (4520)

### திருமதி சிவயோகநாயகி தனபாலசிங்கம்

விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, வளாக வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகநாயகி தனபாலசிங்கம் அவர்கள் நேற்று (04.06.2002) செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில் அகால மரணமானார்.

அன்னார் தனபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் றணீந்திரா - தயாநிதி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான கலைவாணி (கலா), கலைச்செல்வி (செல்வி), தயாபரன் (தயா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2002) புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா.தனபாலசிங்கம்
(கணவர்)

*வளாக வீதி,*
*திருநெல்வேலி.*
*யாழ்ப்பாணம்.* (4521)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.